## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி

# ஆண்டறிக்கை

## 2023

இல.27, மெல்போர்ன் அவினியு, கொழும்பு - 04, சிறிலங்கா.
தொலை. +94 112 584 184 பெக்ஸ் : +94 112 500 674
மின்னஞ்சல்: infosugarsrilanka@gmail.com


இன்பகரமான வெற்றியின்
பயணத்தின் ஆரம்பம்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது தத்துவம், நோக்கு, குறிக்கோள்கள், மூலோபாயங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு | 4 |
| நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள் | 6 |
| தலைவர் கூற்று | 8-9 |
| பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கூற்று | 10 |
| கார்ப்பரேட் ஆளுகை | 11-12 |
| நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை | 13 |
| இடர் முகாமைத்துவம் | 14 |
| எமது காலாச்சாரம் மற்றும் விழுமியங்கள் | 16 |
| உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கை | 17 |
| பணிப்பாளர் சபை | 19-20 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் நிறுவகக் கட்டமைப்பு | 22-27 |
| சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை | 28-37 |
| விரிவான வருமானக் கூற்று | 38 |
| நிதி நிலைமை கூற்று | 39 |
| உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று | 40 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 41 |
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் | 42-62 |
| கூறாக்கப்பட்ட நிதி தகவல்கள் - பெல்வத்த மற்றும் செவனகல | 63-70 |
| பத்துவட சுருக்கம் | 71 |
| நிலைபெறுதன்மை அறிக்கை | 72-73 |
| வரைபடங்களுடன் கூறாக்கப்பட்ட ஒப்பீடு - பெல்வத்த மற்றும் செவனகல | 74 |
| செயன்முன்னேற்ற அறிக்கை | 75-78 |
| கூட்டமைப்புத் தகவல் | 79 |

## எமது தத்துவம்

கிராமியப் பொருளாதார முன்னேற்றத்தினூடாக தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்து, சீனியை அடிப்படையாகக் கொண்ட விவசாய மற்றும் கைத்தொழில் சார்ந்த விவசாயிகளின் சமூக பொருளாதாரத்தை உயர்த்துதல்.

## எமது தொலைநோக்கு

சீனி உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்

## எமது நோக்கங்கள்

**பணி இலக்கு 333 – குறுங்காலம் (3 வருடங்கள் 2026 அளவில்)**

1) 57,600 மெட்ரிக் தொன் சீனி உற்பத்தியை அடைதல
2) 16,000 விவசாயக் குடும்பங்களிற்கு உதவுதல்.
3) 56,000 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பளித்தல்
4) தேசிய சீனித் தேவைப்பாட்டில் 9.6% பங்களித்தல்
5) ரூபா 5.7 பில்லியன் தேறிய வருமானத்தை எய்தல்
6) ரூபா 11 பில்லியன் பெறுமதியான அன்னிய செலாவணியைச் சேமித்தல்.
7) 46 மெகாவோட் மின்சக்தியை துணை உற்பத்தி செய்தல்

**பணி இலக்கு 555 – நீண்ட காலம் (5 வருடங்கள் 2028 அளவில்)**

1) 66,300 மெட்.தொன் சீனி உற்பத்தியை அடைதல்
2) 20,000 விவசாயக் குடும்பங்களிற்கு உதவுதல்.
3) 60,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பளித்தல்
4) தேசிய சீனித் தேவைப்பாட்டில் 11% பங்களித்தல்
5) ரூபா 7.6 பில்லியன் தேறிய வருமானத்தை எய்தல்
6) ரூபா 13 பில்லியன் பெறுமதியான அன்னிய செலாவணியைச் சேமித்தல்.
7) 60 மெகாவோட் மின்சக்தியை துணை உற்பத்தி செய்தல்

## மூலோபாயங்கள்

1) வெற்றி - வெற்றி வியாபாரப் பங்குடமைக்கான எமது விவசாயி சார்ந்த வளர்ப்பு மாதிரி
2) நன்றாக விளையும் வகைகளுடன விளைச்சலை விருத்தி செய்து, வினைத்திறன்மிக்க விஸ்தரிப்பு சேவைகளுடனான சிறந்த கமத்தொழில் செயன்முறைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு சிறந்த பலன்களை உறுதிப்படுத்தல்.
3) அளவுகள், தர உற்பத்தி ஊக்குவிப்புகளின் மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல்.
4) செயலாற்றல் சார்ந்த திட்டங்களின் மூலமும் உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் மூலமும் பதவியணியை ஊக்குவித்தல்.

## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

இலங்கை சீனி ஆராய்ச்சி நிறுவகத்தின் ஒருங்கிணைப்புடன் கரும்பு மற்றும் சீனி உற்பத்தித் திறன் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு

கரும்புச் செய்கையாளர்களின் பெறுமதியை நாம் அதிகரிக்க வேண்டியதுடன் நாம் தொழிற்படும் சுற்றாடலிற்கும் சமூகத்திற்கும் பெறுமதி சேர்க்க வேண்டும் என நாம் நம்புகின்றோம்.







வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி

நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள் - 2023

| (தொகைகள் மில்லியன் ரூபாய்களில் அமைந்துள்ளன) | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|
| நிதிசார் முக்கிய அம்சங்கள் | | | |
| **புரள்வு** | 16,095.08 | 19,287.05 | 12,285.07 |
| விற்பனைக் கிரயம் | (10,514.18) | (10,550.15) | (8,980.76) |
| மொத்த இலாபம் | 5,580.90 | 8,736.90 | 3,304.31 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 2,835.11 | 6,045.57 | 1,250.58 |

| தொழிற்படுசார் செயலாற்றுகை | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|
| **காணிப் பயிர்ச்செய்கை** | | | |
| பயிர்செய்யக் கூடிய பகுதி (ஹெக்டேயர்) | 14,536 | 14,760 | 14,874 |
| பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பகுதி (ஹெக்டேயர்) | 12,722 | 13,493 | 13,820 |
| பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பகுதியின் சதவீதம் (%) | 87% | 91% | 93% |

| அறுவடை நிகழ்வுத் திட்டம் | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|
| அறுவடை செய்யப்பட்ட கரும்பு - மெற்றிக் தொன் | 646,805 | 767,572 | 791,288 |
| கடந்த ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு.்.(குறைவு) சதவீதம் | -16% | -3% | 38% |
| கரும்பு விளைச்சல் சதவீதம் (%) | 6.59% | 6.33% | 6.09% |

| சீனி உற்பத்தி | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|
| உற்பத்தி மெற்றிக் தொன்களில் | 41,860 | 36,738 | 48,177 |
| தலா ஒரு வருடத்திற்கு தலா ஒரு நபருக்கான தொன் | 7.51 | 6.64 | 8.75 |

| மனித மூலவளங்கள் | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|
| நிரந்தர | 4,265 | 3,709 | 3,549 |
| ஒப்பந்த | 455 | 517 | 445 |
| ஆமைய | 819 | 1,276 | 1,498 |
| பருவகால | - | - | - |
| பயிலுனர் | 32 | 30 | 15 |
| மொத்த எண்ணிக்கை | 5,571 | 5,532 | 5,507 |



# இனிப்பான வெற்றியானது
## வானத்தைச் சென்றடைவதால்

# தலைவர் கூற்று



வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடனான ஆண்டறிக்கையை பணிப்பாளர் சபை சார்பாக சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மீளாய்வாண்டானது கம்பனியின் செயலாற்றுகையைப் பாதிக்கத்தக்க ஏராளமான பேரண்ட மற்றும் சிற்றண்டப் பொருளாதாரக் காரணிகளால் சவால் மிக்கதாக இருந்தது. உற்பத்தி அளவில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில், கரும்பு மீட்பு வீதமானது 6.33 சதவீதத்திலிருந்து 6.59 சதவீதமாக அதிகரித்து இருந்தது எனினும், ஹெக்டேயருக்கான கரும்பு விளைச்சலானது கவனத்தில் கொள்ளத்தக்க வகையில் 61.21 மெற்றிக் தொன்களிலிருந்து 50.84 மெற்றிக் தொன்கள் வரை வீழ்ச்சியடைந்து, உற்பத்தி அளவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**பொருளாதாரச் சூழல்**

இலங்கைப் பொருளாதாரமானது 2022 இல் காணப்பட்ட 7.3 சதவீத கணிசமான சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2023 இல் 2.3 சதவீத மிதமான சுருக்கத்துடன் மீள்வதற்கான அறிகுறிகளைக் காட்டியது. 2023 ஆம் ஆண்டில் படிப்படியான மற்றும் நிலையான மீளுருவாக்கம் தெளிவாகத் தெரிந்ததுடன், குறிப்பாக ஆண்டின் இரண்டாம் பாதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (புனூ) சாதகமான வளர்ச்சி விகிதங்களைப் பதிவு செய்தது. பணவீக்கத்தைக் குறைக்கும் வெளிப்புற அழுத்தங்களுக்கு மத்தியில் புதுப்பிக்கப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மையால் இது அடித்தளமிடப்பட்டது.

**கைத்தொழில் கண்ணோட்டம்**

ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் கல்ஓயா, செவனகல, பெல்வத்தை மற்றும் எதிமலே ஆகிய பிரதேசங்களின் மொத்த சீனி உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் பதிவான 78,857 மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் 16.2 சதவீதம் குறைந்து 66,013 மெட்ரிக் தொன்னாக இருந்தது.

நான்கு தொழிற்சாலைகளால் நிர்வகிக்கப்படும் கரும்பு பயிர்ச்செய்கையின் மொத்த அளவானது ஆண்டில் 26,638 ஹெக்டெயராக உள்ளது. இதேவேளை, நான்கு தொழிற்சாலைகளால் நிர்வகிக்கப்படும் கரும்பு உற்பத்தியின் மொத்த அளவானது ஆண்டில் 8 சதவீதம் குறைந்துள்ளது. இதனிடையே, கரும்பு உற்பத்திக்கான ஊட்டச்சத்துக்களின் கடுமையான பற்றாக்குறையின் பிரதிபலிப்பாக நான்கு சீனித் தொழிற்சாலைகளின் சராசரி உற்பத்தி 2023 இல் ஹெக்டெயருக்கு 54.9 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன், ஒப்பீட்டளவில் 2022 இல் ஹெக்டெயருக்கு 59.7 மெட்ரிக் தொன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்த பிழியப்பட்ட கரும்பு 1,010,867 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன் மொத்த சீனி பிரித்தெடுத்தல் விகிதம் ஆண்டுக்கு 6.54 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டில் எத்தனோல் உற்பத்தி 13.35 மில்லியன் லிட்டராக இருந்தது.

உள்நாட்டு சீனித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் அதே வேளையில், உள்நாட்டு சீனித் தொழிலை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டது. உள்நாட்டு சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான முதன்மை முன்னுரிமைகளாக விளைச்சல் பிரதேசங்களை விரிவுபடுத்துதல் மற்றும் தொழிற்சாலையின் கொள்ளளவை மேம்படுத்துதல் ஆகியவற்றின் தேவையை கருத்தில் கொண்டு, 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில். வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் துணை நிறுவனமாக வெலி ஓயா சீனித் தொழிற்சாலை எனும் பெயரில் புதிய சீனித் தொழிற்சாலையொன்றைத் தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்ததன் மூலம் உள்நாட்டு சீனி உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

**கம்பனி செயலாற்றல்**

செவனகல சீனித் தொழிற்சாலையின் சீனி உற்பத்தியானது 13,783 மெட்ரிக் தொன்கள் வரையான 9 சதவீத அதிகரிப்பினைக் காண்பித்த அதேவேளை பெல்வத்தை சீனித் தொழிற்சாலையின் சீனி உற்பத்தியானது 28,077 மெட்ரிக் தொன்கள் வரையான 16.4 சதவீத அதிகரிப்பினை 2023 ஆம் ஆண்டில் கொண்டிருந்தது . ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கான இலங்கை சீனிக் கம்பனியின் மதிப்பிடப்பட்ட பங்கானது 2022 ஆம் ஆண்டின் 46.6 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் 63.4 சதவீதம் ஆகும். எதனோல் உற்பத்தியானது 2022 ஆம் ஆண்டின் போது 11,790,195 லீட்டர்களிலிருந்து, 2023 ஆம் ஆண்டின் போது 7,521,979 லீட்டர்கள் வரை குறைவடைந்துள்ளது.

**நலன்புரி**

ஆண்டின் போது நலன்புரிக்காக கணிசமான தொகையைக் கம்பனி செலவிட்டிருந்தது. காப்பகத்திற்காகவும் உட்கட்டமைப்பிற்காகவும் வேறான உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். கம்பனியால் தொழிலாளர் குடும்பங்களின் குழந்தைகளுக்கான பாடசாலைப் போக்குவரத்தையும் வழங்கியிருந்தது. கம்பனியால் ஆரம்பப் பாடசாலையும் குழந்தைகள் காப்பகமும் பராமரிக்கப்படுகின்றது.

**எதிர்கால நோக்கம்**

முன்னோக்குகையில், இலங்கைப் பொருளாதாரம் தற்போது நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, எனினும் அரசாங்கம் பிரவுன் சீனி மற்றும் எத்தனோல் மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை உள்ளூர் உற்பத்தியாளர்கள் குறைந்த போட்டி மற்றும் அவர்களின் உற்பத்திகளுக்கு கவர்ச்சிகரமான விலைகளை எதிர்கொள்வதால் உள்ளூர் சீனித் தொழிலுக்கு சாதகமான பலன்களை உருவாக்கும். எமது உற்பத்திக்கென ஓர் திட்டவட்டமான வியாபாரப் பொருள் சந்தை உள்ளது. கரும்பிற்கான உற்பத்திப் பகுதியை அதிகரிப்பதில் தொடர்ந்தும் சபை கவனம் செலுத்தி வருகின்றது. சிறந்த விளைவைப் பெறுவதற்கு தற்போதுள்ள விவசாயிகளை ஊக்குவிப்பதும் புதிய விவசாயிகளைக் இத் துறைக்குள் கொண்டுவருவதும் அவசியமாகும்.

புதிய காணி நிலங்களை கொள்வனவு செய்து எமது சொந்த பயிர்ச் செய்கை உற்பத்தித் திறனை அதிகரிப்பது முக்கியமானதாகும். பிரதான உற்பத்திப் பொருளுக்கு மேலதிகமாக எமது தொழிற்பாட்டின் அதிகூடிய நன்மையை அடைவதற்கு துணை உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்வதிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

**பாராட்டு**

2020 ஆம் ஆண்டின் காலப் பகுதியிலும் கடந்த காலப்பகுதியிலும் தங்கள் அரிய பணிகளையும் பெறுமதிமிக்க பங்களிப்பையும் வழங்கியிருந்த முன்னைய பணிப்பாளர் சபைக்கும் கம்பனியின் முகாமைத்துவத்திற்கும் உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கம்பனியுடன் எப்போதும் கைகோர்த்து செயற்பட்டமைக்காக கரும்புச் செய்கையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும், சீனி மொத்த விற்பனை வணிகர்களுக்கும், வங்கியாளர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேஜர் ஜெனரல். (ஓய்வுபெற்ற) எஸ்.எம்.எஸ்.பீ.பி.சமரகோன் RWP, RSP
தலைவர்

# பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கூற்று



அனைத்து அக்கறையுடைய தரப்பினருக்கும்,

**வியாபாரச் சூழல்**

2023 ஆம் ஆண்டானது கம்பனியின் நிதி நிலைமைக்கு சாதகமான தாக்கங்களை ஏற்படுத்திய திருப்திகரமான தாக்கங்களை ஏற்படுத்திய வருடமாக அமைந்திருந்தது. ஆண்டினுள் உள்நாட்டு உரம் மற்றும் ஏனைய மூலப்பொருள் பற்றாக்குறை நிலவிய போதிலும் சீனி உற்பத்தியானது 5,122 மெற்றிக் தொன்களால் அதிகரித்தது, எனினும் நாட்டில் மதுபான விலை கடுமையாக அதிகரிப்புடன் அதன் தேவை குறைவடைந்ததனால் எதனோல் தேவை பெருமளவில் குறைந்தமையால் எதனோல் உற்பத்தியானது 4,268,216 லீட்டர்களால் வீழ்ச்சியடைந்தது. கம்பனியால் ஆண்டினுள் ஒரு கிலோ கிராம் சீனிக்கான சராசரி விற்பனை விலையாக ரூபா 312 இனையும், ஒரு லீட்டர் எதனோல் இன் சராசரி விலையாக ரூபா 872.67 இனையும் பேணக்கூடியதாக இருந்தது. மீளாய்வுக்குரிய நிதியாண்டினுள் கம்பனியானது கடந்த வருடத்தின் ரூபா 19,287 மில்லியனுக்கு ஒப்பாக ரூபா 16,095 மில்லியனான வருமானத்தினை பதிவு செய்திருந்தது. கம்பனியானது 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்த வரிக்கு முந்தைய செயற்பாட்டு இலாபமான ரூபா 6,045 மில்லியனுக்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 2,835 மில்லியனான வரிக்கு முந்தைய செயற்பாட்டு இலாபத்தினை பதிவு செய்து குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அடைந்துள்ளது. எதனோல் விற்பனை வீழ்ச்சியானது ஆண்டிற்கான இலாப வீழ்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. குறித்த ஆண்டில் விற்பனைக் கிரயமானது ரூபா 10,514 மில்லியன் ஆகும். நிர்வாகச் செலவினங்கள் ரூபா 214 மில்லியனால் அதிகரித்து ரூபா. 3,566 மில்லியாக இருந்தது. ஆண்டிற்கான நிதி வருமானமானது ரூபா 115 மில்லியனில் இருந்து 656 மில்லியன் வரை அதிகரித்திருந்த அதேவேளை, நிதி செலவினமானது ரூபா 18 மில்லியனால் குறைவடைந்து ரூபா. 69 மில்லியனாக இருந்தது.

**தொழில்நுட்பம்**

கம்பனியின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நிர்வாகம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உற்பத்தியை அதிகரிப்பதற்காக தொழிற்சாலைத் திறனை அதிகரிக்க செவனகலவில் தொழிற்சாலை விரிவாக்க நடவடிக்கையை நிர்வாகம் பொறுப்பேற்றுள்ளது. ஒருங்கிணைந்த மென்பொருள் தீர்வினை ERP (எண்டர்பிரைஸ் ரிசோர்ஸ் பிளான்னிங்) ரூபா. 129 மில்லியன் செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வர்த்தக செயல்முறைகளின் ஆற்றல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் நிகழ்நேர தரவு மற்றும் அறிக்கையிடல் திறன்களை வழங்குவதற்கும் இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. சீனி உற்பத்தி செயல்முறையின் எச்சங்களைப் பயன்படுத்தி உயிரியல் உரம் தயாரிக்கும் ஒரு உயிரியல் உர உற்பத்தி தொழிற்சாலையை ரூபா. 1,433 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு கம்பனி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இரசாயன உர இறக்குமதி செலவினத்தை ஆண்டுக்கு ரூ.350 மில்லியனால் குறைத்தல், பசுமைப் பொருளாதார கலாச்சாரத்தை புகுத்துதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் எச்சங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல், இரசாயனமில்லாத உரம் மற்றும் பசுமை ஆற்றல் நுகர்வு கருத்தை அறிமுகப்படுத்துதல் மூலம் ஆரோக்கியமான முறையில் மண்ணின் நிலையை மேம்படுத்துதல் போன்ற பல நன்மைகளை இத்திட்டத்தின் மூலம் உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

**மனிதவளம்**

நிறுவனத்தின் வெற்றியானது அதன் ஊழியர்களாலேயே வழிநடத்தப்படுகின்றது. ஊழியர்களுக்கு நிறுவனத்தின் நம்பிக்கைப் பெறுமதிகளுடன் வழிகாட்டுவதுடன், பாதுகாப்ப, எமது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சிறப்புத்தன்மை, தொடர்ச்சியான தன்மை, நிலைபேறான தன்மை மற்றும் எமது சமூகம் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. மிகவும் பெறுமதியான வளத்தினை தேக்கிவைப்பதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி இன்றியமையாதது ஆகும். அதனுள் எமது விவசாயிகளும் உள்ளடங்குவர். அதன் காரணமாக பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் தொடர்பில எதிர்வரும் வருடங்களில் முகாமைத்துவம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முகாமைத்துவத்துவம் மற்றும் அனைத்து ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சிக்கு நன்றி தெரிவிக்க நான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கின்றேன். அனைவரினதும் கூட்டு முயற்சி பாராட்டப்படுவதுடன், அனைத்து அக்கறையுடைய தரப்பினருக்கும் நலன்களை பெற்றுத்தரும் வகையில் அனைத்து சந்தர்ப்பங்களினதும் உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்வோம்.



காமினி ரசபுத்திர
பணிப்பாளர் / பி.நி.உ

லங்கா சுகர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
ஆண்டு அறிக்கை – 2023

கார்ப்பரேட் ஆளுகை

லங்கா சுகர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் (எல்.எஸ்.சி.பி.எல்) நிறுவன நிர்வாகக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துகிறது, இது இயக்குநர்கள் குழு அல்லது சிரேஷ்ட நிர்வாகத்தின் பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துகிறது மற்றும் நிறுவன விவகாரங்களை இயக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் நிர்வகிப்பதற்கான அமைப்பு. கார்ப்பரேட் நிர்வாகத்தின் சிறந்த நடைமுறைகள், பொருத்தமான கார்ப்பரேட் உத்திகளை உருவாக்கி செயல்படுத்துவதன் மூலம் முன்னேற்றத்தை நோக்கி வழிநடத்துகிறது. இந்த கார்ப்பரேட் ஆளுகை நடைமுறைகள் முடிவெடுக்கும் தரத்தை மேம்படுத்துவதோடு நிறுவனத்தின் வளர்ச்சி, லாபம் மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்கிறது.

வாரியத்தின் கலவை

தலைவர் தலைமையிலான டுளுஊீடு இன் இயக்குநர்கள் குழு, நிர்வாகக் கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் முன்னேற்றங்கள் போதுமான அளவு வலுவானதாகவும், மாறும் சூழலில் பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதிசெய்ய உறுதிபூண்டுள்ளது. வாரியம் தற்போது ஐந்து நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கருவூலத்தால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் பணிப்பாளர் ∴ பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட இரண்டு நிறைவேற்றுப் பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. வாரியம் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிக்கை அளிக்கும்.

இயக்குநர்கள் குழு, மூத்த நிர்வாகம் மற்றும் டுளுஊீடு இன் அனைத்து ஊழியர்களும், நிறுவனத்தின் நன்மதிப்பைப் பாதிக்கக்கூடிய தங்கள் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இந்தக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்வது அவசியம் இயக்குநர்கள் குழுவின். டுளுஊீடு பொது நிறுவனங்களின் துறையால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி கார்ப்பரேட் நிர்வாகத்தின் கட்டமைப்பை ஏற்றுக்கொள்கிறது மற்றும் வாரியம் ஒழுங்குமுறை தேவைகள், தன்னார்வ குறியீடுகள், சந்தை சிறந்த நடைமுறைகள் மற்றும் பங்குதாரர்களுக்கு வெளிப்படையான முறையில் மதிப்பை வழங்க வேண்டியதன் அவசியத்தை கணக்கில் எடுத்துக்கொள்கிறது. தாம் தெரிவு செய்த துறைகளின் உச்சத்தை எட்டிய பல ஒழுக்கத் திறன்களை வெளிப்படுத்தி, பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட சுயாதீனக் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை திறைசேரியால் நியமிக்கப்படும் உயர் மதிப்பிற்குரிய நபர்களை இந்தச் சபை உள்ளடக்கியுள்ளது. வாரியம் ஒரு மூலோபாயத் திட்டம் மற்றும் நிறுவனத்திற்கான முக்கிய கொள்கைகளை அங்கீகரிக்கிறது மற்றும் வாரிய துணைக்குழுக்கள் மற்றும் முக்கிய நிர்வாகப் பணியாளர்கள் மூலம் அவற்றை செயல்படுத்துவதை திறம்பட கண்காணிக்கிறது.

கார்ப்பரேட் ஆளுகை

லங்கா சுகர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் (எல்.எஸ்.சி.பி.எல்) நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதில் நிறுவன விவகாரங்களைச் செயல்படுத்துவதில் தொழில்சார் முறையான கவனிப்பு, நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் சிறந்த நடைமுறைகளை உறுதி செய்வதற்காக உள் கட்டுப்பாடுகளின் அமைப்பை எப்போதும் மதிப்பாய்வு செய்கிறது. எனவே, டுளுஊீடு ஆனது பொருட்களின் மதிப்பை அங்கீகரிக்கிறது கார்ப்பரேட் ஆளுகை மற்றும் அது அபாயங்களை நிர்வகிக்க மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு மதிப்பு சேர்க்கும் வாய்ப்புகளை வழங்குகிறது என்று நம்புகிறது. மேலும், பல-ஒழுங்கான தொழில்முறை திறன்களைக் கொண்ட மூன்று நிர்வாகமற்ற இயக்குநர்களைக் கொண்ட துடிப்பான தணிக்கைக் குழுவின் இருப்பு மூலம் பெருநிறுவன நிர்வாகத்தின் சிறந்த நடைமுறைகளுக்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம்

வாரியக் கூட்டங்கள்

நிறுவனத்தின் கார்ப்பரேட் விவகாரங்கள் சுமூகமாக இயங்குவதை உறுதி செய்வதற்காக வாரியம் மாதம் ஒருமுறை கூடி விவாதித்து மூலோபாய முடிவுகளை எடுக்கிறது. மேலும், உத்திகளை உருவாக்குதல், வணிகக் கொள்கைகள் மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் மற்றும் அத்தகைய உத்திகளை வெற்றிகரமாக செயல்படுத்துதல் போன்ற முக்கியமான விஷயங்களுக்கு மேலதிகமாக நிர்வாகக் கணக்குகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை வாரியம் மதிப்பாய்வு செய்கிறது. மேலும், கார்ப்பரேட் திட்டங்கள், ஆண்டு வரவு செலவுத் திட்டங்கள், மூலதனச் செலவுகள், புதிய முதலீடுகள் மற்றும் புதிய முயற்சிகளை முதலீட்டுத் திட்டங்களை மதிப்பாய்வு செய்த பிறகு வாரியம் அங்கீகரிக்கிறது.

நிறுவனத்தின் செயலாளர்கள் மற்றும் சுயாதீன தொழில்முறை ஆலோசனை

லங்கா சுகர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் (எல்.எஸ்.சி.பி.எல்) இன் வாரியமும் சிரேஷ்ட முகாமைத்துவமும் நிறுவனச் செயலாளர்கள் மற்றும் பல்வேறு வெளி நிபுணத்துவ அமைப்புகளிடம் இருந்து சுயாதீனமான தொழில்முறை ஆலோசனைகளைப் பெறுவதற்குத் தேவைப்படும்போது. மேலும், நிறுவனத்தின் கார்ப்பரேட் மூலோபாயத்திற்கு ஏற்ப ஒரே நேரத்தில் தொழில்நுட்ப தேவைகளை மேம்படுத்துவதற்கு நிறுவனம் விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் நிதி நிபுணர்களுடன் நெருக்கமாக செயல்படுகிறது.

வணிக புத்திசாலித்தனம் மற்றும் மேலாண்மை கூட்டங்கள்

யூனிட்டின் அன்றாட செயல்பாடுகள் சீராக இயங்குவதை உறுதி செய்வதற்காக, நிறுவனம், மூலோபாய வணிகப் பிரிவின் மட்டத்தில் வாராந்திர செயல்பாட்டுக் கூட்டங்களை நடத்துகிறது. மேலும், டுளுஊீடு மாதாந்திர நிர்வாகக் கூட்டங்களை நடத்துகிறது, இது மாதாந்திர வாரியக் கூட்டங்களுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் ஆகும். இந்த முகாமைத்துவக் கூட்டங்கள் முறையே பெல்வத்தை மற்றும் செவனகல அலகுகளில் மாதத்தின் மூன்றாவது வாரத்தின் ஒவ்வொரு வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளிலும் தலைவர் மற்றும்.ஃ.அல்லது பணிப்பாளர்.ஃ. பிரதம நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் நடைபெறுகின்றன. இந்தக் கூட்டங்களில் அனைத்துப் பிரிவுத் தலைவர்களும், பிரிவுத் தலைவர்களும் கலந்துகொள்வதுடன், கடந்த மாதத்தின் செயல்பாடுகளை முன்வைத்து, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அந்தச் சவால்களைச் சமாளிப்பதற்கான உத்திகள் குறித்து விவாதிப்பார்கள்.

நிதி அறிக்கை

டுளுஊீடு இன் இயக்குநர்கள் குழு அதன் வருடாந்திர அறிக்கைகளை சரியான நேரத்தில் வெளியிடுவது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான சட்டப்பூர்வ தேவையாக கருதுகிறது. இந்த ஆண்டு அறிக்கைகள் விரிவான வருமான அறிக்கை, நிதி நிலை அறிக்கை மற்றும் பணப்புழக்கங்களின் அறிக்கை மற்றும் பிற தேவையான செயல்பாட்டுத் தகவல்களை உள்ளடக்கிய நிதி அறிக்கைகளைக் கொண்டிருக்கின்றன. இந்த நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை - 2023

நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை

கம்பனி பலவேறு நிறுவன சமூகப்பொறுப்பு சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. பிரதேசத்திலுள்ள 11 பாலர் பாடசாலைகளை நடாத்திச் செல்வதற்கு கம்பனி பங்களிப்பு செய்துள்ளது. கம்பனியின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைக்கு செல்வதற்கு 10 பாதைகளில் பேருந்து சேவையை கம்பனி வழங்குகின்றது. மொனராகலை மாவட்டத்தின் பாடசாலைகள், விகாரைகள் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு கம்பனியால் அனுசரணைகள் வழங்கப்படுகின்றன. லங்கா சீனிக் கம்பனியின் ஊழியர்கள் மற்றும் விவசாயிகளுக்கு விசேடமான மருத்துவ நிலையம் ஒன்றினை நடாத்திச் செல்கின்றது. குடியிருப்பு பிரதேசம், வெளிவாரி பயிர்ச்செய்கை மற்றும் களப் பிரதேசங்களின் வீதிகளை பராமரிப்பதற்கு கம்பனியால் பாரிய கிரயம் மேற்கொள்ளப்படுகின்றது. கம்பனியால் அமைய ஊழியர்களின் போக்குவரத்திற்காக 40 லொரிக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட லங்கா சீனிக் கம்பனியால் யானைகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்கும் வகையில் வருடமொன்றுக்கு சுமார் 400 மில்லியனுக்கு அண்மிய தொகை செலவழிக்கப்பட்டு பாரிய பிரதேசமொன்று உள்ளடங்கும் வகையில் யானை வேலியொன்று பராமரிக்கப்படுகின்றது. இதனூடாக இந்த பிரதேசத்தில் வசிப்பவர்களின் உயிர்கள் மற்றும் ஆதனங்கள் தன்னியக்கமான முறையில் பாதுகாக்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனிக் கம்பனியானது மொனராகலை மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய கம்பன என்பதால், மாவட்டத்திலுள்ள மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளது. அதற்கு மேலதிகமாக கம்பனி சுமார் 10,000 விவசாயிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை கொண்டு செல்வதற்கு உதவியு ள்ளது.

கம்பனியானது இலாபமீட்டுதலை பிரதான நோக்கமாக கொண்டுள்ள போதிலும், உற்பத்தி செயன்முறையில் ஏற்படும் கழிவுகளை காரணமாக ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களிலிருந்து சூழலைப் பாதுகாப்பதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## இடர் முகாமைத்துவம்

| இடர்களின் வகை | விபரம் | செயல்நடவடிக்கைத் திட்டம் |
|---|---|---|
| செயற்பாட்டு இடர்கள் | கரும்பு பயிர்ச்செய்கைக்கான காணிகளை கண்டறிதல். | ▪ கரும்பின் விலையை ரூபா 8,000 இலி இருந்து ரூபா 10,000 வரை அதிகரித்தல்<br>▪ விதை முற்பணங்கள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை கடன் அடிப்படையில் வழங்குதல்<br>▪ அரசின் உர மானியத்தின் மூலம் கரும்பு விவசாயிகளும் நன்மை பெற்றுள்ளனர். |
| கடன் இடர் | விவசாயிகளுக்கு மூலப்பொருட்களை வழங்குவதன் மூலம் உருவாகும் ஐயக்கடன். | கடனை மீள அறவிடுதல் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அதிக பொறுப்புகளை சாட்டுதல். |
| பணவீக்க இடர் | மேந்தலைகள் மற்றும் மூலப்பொருள் கிரயம் ஆகியவற்றின் காரணமாக இலபத்தன்மையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள். | உற்பத்தி திறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்தி கிரயத்தினை குறைத்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல். |
| சந்தை இடர் | உள்நாட்டு சீனி இறக்குமதியாளர்களால் குறைந்த விலையில் சீனி இறக்குமதி செய்யப்படல். | அலகொன்றிற்கான மேந்தலைக் கிரயத்தினை குறைப்பதற்காக உற்பத்தியின் அளவினை அதிகரித்தல். |
| சுற்றாடல் இடர் | யானைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக கரும்பு பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் அறுவடையில் வீழ்ச்சியினை ஏற்படுத்தும். | யானைக்கான அகழிகள், வேலிகள் மற்றும் மனித தடைகளை கம்பனியின் செலவில் உருவாக்குதல். |


இனிப்பான வெற்றிக்கான,
தெளிவான மார்க்கம்

# எங்கள் கலாச்சாரமும் விழுமியங்களும்

எமது விவசாயிகள்

விவசாயியே எமது அரசராவர். விவசாயிகளே கம்பனியின் பிரதான, மிக முக்கியம் வாய்ந்த பங்குதாரர்களில் ஒருவர் என வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி நம்புகின்றது. விவசாயிகளால் அனேகமாக அனைத்துக் காணிகளும் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுவதனால் செவனகல பிரிவு தங்கள் சொந்த வேளாண்மைக்கென மட்டுப்படுத்தப்பட்ட காணிகளை மாத்திரமே கொண்டுள்ளமை அதற்கு பாரதூரமான காரணியாக உள்ளது.

ஒரு ஹெக்டேயர் கரும்புப் பயிர்ச்செய்கையிலிருந்தான சராசரி வருமானம் தலா ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ ரூபா 45,000 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏராளமான பகுதிகளில் கரும்புச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு குறைந்த அளவு வருமானமே கிடைத்துள்ளது. இந் நிலை இத் துறையில் விவசாயிகள் நிலைத்திருப்பதை உற்சாகமிழக்கச் செய்து இதற்குப் பதிலாக வேறு பயிர்ச் செய்கைகளில் அவர்கள் நாடியிருந்தனர். லங்கா சீனி, இந் நிலையை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு விவசாயிகளுக்கு தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு உதவுவதற்காக பல வழிமுறைகளை மேற்கொண்டது. தற்போது ஒரு விவசாயிக்கு தலா ஒரு மெற்றிக் தொன் கரும்பிற்கு ரூபா 10,000 கொடுப்பனவு செய்யப்படும் அதேவேளை முன்னர் தலா ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 8,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறாக, கரும்புப் பயிர்ச் செய்கை வரலாற்றில் தலா ஒரு மெற்றிக் தொன்னிற்கு ஆகக் கூடுதலான விலையை தற்போது வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியே வழங்கி வருகின்றது.

எமது வாடிக்கையாளர்கள்

எமது வாடிக்கையாளர்களே எமது எதிர்பார்ப்பாகும். எமது சனத்தொகையில் 20 மில்லியனிற்கும் மேலானவர்கள் எமது வாடிக்கையாளர்களே. அவர்களுக்கு தரமானதும் ஆரோக்கியமானதுமான சீனியை நியாய விலையில் வழங்குவதே எமது முக்கிய நோக்காகும். இலங்கையர் ஒருவரின் ஒரு வருடத்திற்கான சீனி நுகர்வு 30 கிலோ கிராம் முதல் 35 கிலோ கிராம் வரையாக உள்ளது. எமது உற்பத்திக் கொள்ளளவு 10% ஆக நிலவுவதுடன் எஞ்சிய 90% இறக்குமதி செய்யப்பட வேண்டியதாக உள்ளது. 2023 ஆம் ஆண்டில் சீனி இறக்குமதிக்காக வருடாந்தம் 423 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலாக செல விடப்பட்டுள்ளது. எமது பொருளாதாரத்தில் இது ஓர் பாரிய பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்றது.

எமது ஊழியர்கள்

எமது ஊழியர்களே எமது அரிய செல்வமாகும். எந்த ஒரு நிறுவனமும் விசுவாசமானதும் ஊக்குவிக்கப்பட்ட ஊழியர்கள் இன்றி வெற்றியடைவதில்லை. தொழிற்பாட்டு விளைவுகள் எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மட்டத்தின் பிரதிபலிப்புக்கள் எனலாம். லங்கா சீனியின் ஓர் முக்கிய காரணியில் மனித வளம் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னைய காலத்தில், சீனித் துறையில் ஈடுபட்ட ஊழியர்கள் தமது வாழ்க்கையில் பலவிதமான மன நிறைவற்ற நிலைகளிற்கு தொழில் நியதிகள், மிகக் குறைந்த அளவிலான மாதாந்த வருமானம், மிகை ஊதியம் தொடர்பான பிரச்சனைகளையும் பதவி உயர்வுகள் முதலிய பிரச்சனைகளையும் எதிர்நோக்கியிருந்தனர். இக் காரணிகளைக் கருத்திற்கொண்டு லங்கா சீனிக் கம்பனி அதற்கு முன்னுரிமை அளித்து பிரச்சனைகளிற்குப் பரிகாரம் தேடத்தொடங்கியது.

நல்லாட்சி

எமது சட்டரீதியான கணக்காய்வாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமாகும்.

வெளிக் கணக்காய்வாளர்களுக்கு மேலதிகமாக, பெல்வத்த மற்றும் செவனகல ஆகிய இரு பிரிவுகளும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்களைக் கொண்டுள்ளதுடன் நேரடியாக தலைவருக்கும் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கும் நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட குழு உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகளைக் கிரமமான முறையில் மீளாய்வு செய்து வருவதுடன் சிரேஷ்ட முகாமையாளர்களிடமிருந்து விளக்கம் கோரி, அறிக்கைகளைத் தாங்கள் கண்டறியும் காண்புகளுடன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கின்றது.

தடைகள்

இன்னமும் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனைகள் உள்ளமையால் நாம் அவற்றை எதிர்காலத்தில் தீர்ப்பதற்குக் குறியாக உள்ளோம்.

பெல்வத்த மற்றும் செவனகல அமைவிடங்களில் புதிய கம்பனிக்கு உரித்தற்ற அசையும் சொத்துக்களைக் கொண்டுள்ளன. சட்ட ரீதியான நடைமுறைகள் பூர்த்தியாகும் வரை நாம் காத்திருந்து அவற்றை அகற்றுவதற்கோ அல்லது நடைமுறையில் உள்வாங்குவதற்கோ எதிர்பார்த்துள்ளோம்.

காணிச் சுவீகரிப்பு நடைமுறை மிகவும் மெதுவான நிலையிலேயே உள்ளதுடன் காணியில் போதிய பகுதி சுவீகரிக்கப்படும் வரையில் எமது மத்திய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட வேண்டி உள்ளன. இது முகாமைத்துவ ஆற்றஇது முகாமைத்துவ ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.

முகாமைத்துவம் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கான மூலோபாயங்களை ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. புதிய முதலீடுகளிற்கு நிதியீட்டுவது எமது இலட்சியப் பாதையில் எதிர்கொள்ளும் இன்னுமோர் சிக்கலாகும். பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளுக்கு உரிய காணிகளின் உரிமை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு உரித்தற்ற நிலையில் பெரும்பாலான வங்கிகள் பெருமளவு சொத்துக்களை ஈடாகக் கேட்கின்றன. எவ்வாறாயினும், உள்நாட்டில் உருவாக்கப்பட்ட எமது நிதியைப் பயன்படுத்தி மூலதனத் திட்டங்களுக்கு நிதியளிக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் இப்போது இருக்கிறோம்.

பெல்வத்தையில் உள்ள தகவல் தொழில்நுட்ப முறை, தற்போதைய செயற்பாட்டு இயக்கத்தின் தகவல்களையும் வரலாற்றுத் தகவல்களையும் கொண்டுள்ள அதேவேளை செவனகலவில், முன்னைய முகாமைத்துவம், ஊழியர்கள் தொடர்பான சகல பதிவேடுகளையும் எடுத்துச்சென்றுள்ளனர். ஆகையால், பணிக்கொடைக் கொடுப்பனவுகள், ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் தொடர்பான விடயங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. செவனகல சீனிக் கம்பனியின் முன்னைய முகாமைத்துவத்திடம் இருந்து புத்தகங்களையும் பதிவேடுகளையும் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2023

**கணக்காய்வுக் குழு அறிக்கை**

கம்பனியின் கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவர். கணக்காய்வுக் குழுவானது நிறைவேற்றுத் தரமற்ற மூன்று அங்கத்தவர்களை கொண்டுள்ளது.

கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் இதன் தலைவரின் தேவைக்கேற்ப நிரட்படுத்தப்படுவதுடன், அவர் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் சபை அங்கத்தவர் ஆவார். கணக்காய்வுக் கூட்டங்கள் பொது முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிர்வாகத்தினால் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், தலைவர், பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதம முகாமையாளர் ஆகியோர் அழைப்பின் அடிப்படையில் பங்குபற்றுவதுடன்.

**கணக்காய்வுக் குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் தரம் மற்றும் ஒருமித்த தன்மை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல்களின் பொருண்மைத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய நிதி அறிக்கையிடல் செயன்முறை ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை நடைமுறைப்படுத்தல்.

கம்பனி திறைசேரியால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகிய வற்றை உள்ளடக்கிய நீதி மற்றும் சட்டத் தேவைப்பாடுகளை கம்பனி பின்பற்றுகின்றது என்பதனையும் கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவை போதியளவில் காணப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்தும் செயன்முறைகள் மீதான பொறுப்புகளை செயற்படுத்தல்.

**நிதியாண்டிற்குரிய செயன்முன்னேற்றம்**

கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் அங்கீகாரம் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும்.

கணக்காய்வுக் குழுவானது கணக்காய்வு விடயப்பரப்பு, கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் அதன் செயற்திறன் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்து மேற்பார்வை செய்கின்றது.இந்த குழுவானது எல்.எஸ்.சீ.பீ.எல் இன் செயற்பாடுகளை எதிர்கால திட்டங்களுடன் மீளாய்வு செய்கின்றது.

எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வகையில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அத்துடன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயல்திறன் ஆகியவை வணிகப் பிரிவுகளின் தலைவர்கள் / கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு சரியான நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன.

2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எல்.எஸ்.சி.பி.எல் இன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, முகாமைத்துவத்தின் பதில்களுடன், முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், கணக்காய்வாளர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட திருப்தியற்ற பகுதிகளை திருத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளக கணக்காய்வுப் பிரிவால் இனங்காணப்பட்ட இரண்டு (02) வணிக பிரிவுகளின் உள்ளக கட்டுப்பாடுகளிலான பலவீனங்கள் மற்றும் தவறுகள் தலைமை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சி.ஓ.ஒக்களுடன் கலந்துரையாடப்பட்டன, முக்கியமான பகுதிகள் பொருத்தமான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்குதகுந்த நடவடிக்கை எடுக்கும் பொருட்டு முன்னிலைப்படுத்தப்பட்டன.

உள்ளக கணக்காய்வு பிரிவு வழங்கிய சேவைகள் மற்றும் நிறுவனத்தின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கான அவர்களின் முயற்சிகள் ஆகியவற்றுக்காக கணக்காய்வுக் குழு நன்றி தெரிவிக்க விரும்புகிறது. குழுவின் அங்கத்தவர்கள் அளித்த பங்களிப்பு நன்றியுடன் பாராட்டப்படுகிறது. நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு நிதி விடயங்கள் தொடர்பில் அவர்ளின் அனுபவம் மற்றும் திறமை ஆகியன விலைமதிப்பற்றது.

அஜந்த கல்ஹேன
தலைவர் - கணக்காய்வுக் குழு

# இனிப்பான வெற்றிக்கான
## தெளிவான மார்க்கம்



# பணிப்பாளர்களின் விபரம்



தலைவர்
மேஜர் ஜெனரல். (ஓய்வுபெற்ற)
எஸ்.எம்.எஸ்.பீ.பி.சமரகோன் RWP, RSP



பணிப்பாளர் / பி.நி.உ
காமினி ரசபுத்திர



பணிப்பாளர்
அஜந்த கல்ஹேன



பணிப்பாளர்
அமிதா தொடன்வல



பணிப்பாளர்
சுமித் புதிரன



பணிப்பாளர்
லோஹித வெரகம



பணிப்பாளர்
லகித் பங்கஜ சொய்சா

# பணிப்பாளர்களின் விபரம்

**தலைவர்**

மேஜர் ஜெனரல். (ஓய்வுபெற்ற) எஸ்.எம்.எஸ்.பீ.பி.சமரகோன் RWP, RSP

**தொழிற் துறை அனுபவம்**

இலங்கை இராணுவத்தில் 37 வருடங்களாக சேவையாற்றிய இவர் இறுதியாக 11 ஆவது காலாட்படைப் பிரிவின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றியுள்ளார்.

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை – (2021 நவம்பர் - 2022 திசெம்பர்)

**பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்கள்**

திரு. காமினி சோமசந்திர ரசபுத்ர

திரு. காமினி சோமச்சந்திர ரசபுத்ர அவர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனிக் கம்பனி (தனியார்) கம்பனியின் பணிப்பாளராகவும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றுகிறார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை கலைப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்வி நிறுவனத்தில் முகாமைத்துவத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

**தொழிற் துறை அனுபவம்**

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (2010 – 2015)

**பணிப்பாளர் சபை**

திரு. அஜந்த கல்ஹேன
திரு. அஜந்த கல்ஹேன அவர்கள் 31.12.2023 ஆம் திகதி வரையில் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபையின திறைசேரியின் பிரதிநிதியாக இருந்ததுடன், அவர் நிதி அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் ஆவார்.

**தொழிற் துறை அனுபவம்**

இவர் இலங்கை நிர்வாக சேவையில் உள்ள மூத்த உறுப்பினர் ஆவார்.

**திருமதி. அமிதா தொடன்வல**

திருமதி. அமிதா தொடன்வல அவர்கள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஆவார். களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞான பட்டம் பெற்றவர். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

**தொழிற் துறை அனுபவம்**

2001 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை நிர்வாக சேவையில் உள்ள மூத்த உறுப்பினர் ஆவார்.

**திரு. சுமித் பத்திரன**

திரு. சுமித் பத்திரன அவர்கள் தொழில்சார் வழக்கறிஞராவதுடன், வரையறுக்கப்பட்ட லங்கா சீனிக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் பணியாற்றுகின்றார்.

**திரு. லோஹித வேரகம**

திரு. லோஹித வேரகம அவர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக கடமையாற்றுகின்றார்.

**திரு. லக்கித்த பன்கஜ டீ சொய்சா**

திரு. லக்கித்த பன்கஜ டீ சொய்சா அவர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக கடமையாற்றுகின்றார்.

# இனிமையான வெற்றிக்கான வழங்கல் நேரம்



## உயர் மட்ட முகாமைத்துவக் குழு மற்றும் தலைமையகத்தின் நிறுவனக் கட்டமைப்பு



**தலைவர்**
மேஜர் ஜெனரல். (ஓய்வுபெற்ற) எஸ்.எம்.எஸ்.பீ.பி.சமரகோன் RWP, RSP



**பணிப்பாளர் / பி.நி.உ**
காமினி ரசபுத்திர



**தலைமை செயற்பாட்டு உத்தியோகத்தர்**
சமன் குமார



**தலைமை செயற்பாட்டு உத்தியோகத்தர்**
கெலும் பிரியங்கர லியனகே



**பொது முகாமையாளர் (நிதி)**
நிசாந்த ஆசிரி பெர்னான்டோ

# பெலவத்த - நிறுவனக் கட்டமைப்பு

- பிரதம தொழிற்பாட்டு அலுவலர்
  - டிஜிஎம் விவசாயம்
    - எம்ஜிஆர் விவசாயம்
    - எம் ஜிஆர்-ஐ எஸ் எப் ஓ
    - எம் ஜிஆர் -கிராம பொருளாதாரம்
    - எம் ஜிஆர் - அனுசக்தி
    - எம் ஜிஆர் - முடிவு செய்பவர்
    - எம் ஜிஆர் -வாங்கும் பிரிவு
    - எம் ஜிஆர் - காணி அபிவிருத்-தி
  - டிஜிஎம் தொழிற்சாஎ
    - எம்ஜிஆர் தொழிற்சாலை பரிபாலனம்
    - எம் ஜிஆர் - பொறியியல்
    - எம் ஜிஆர் - உற்பத்தி
    - எம் ஜிஆர் -ஆய்வுகூடம்
    - எம் ஜிஆர் - தரக்கட்டுப்பாடு
  - டிஜிஎம் மனிதவளம்
    - எம் ஜி ஆர்-எச் ஆர் பரிபாலனம்
    - எம் ஜிஆர் - மருத்துவ நிலையம்
    - எம் ஜிஆர் - பயிற்ச நிலையம்
  - டிஜிஎம் நிதி
    - எம் ஜிஆர் - நிதி பரிபாலனம்
    - எம் ஜிஆர் - எப்ஏஎம்ஏ
    - எம் ஜிஆர் - களஞ்சியம்
    - எம் ஜிஆர் -எரிபொருள் நல
    - எம் ஜிஆர் - கொள்வனவு திணைக்களம
    - எம் ஜிஆர் - ஐடி
  - டிஜிஎம் பணி இயக்கம்
    - எம் ஜிஆ-ர்-பாதுகாப்பு
    - எம் ஜிஆர் - தோட்ட பாதுகாப்பு
    - எம் ஜிஆர் - நீச்சல் தடாகம்
    - எம் ஜிஆர் -விருந்-தாளி கழகம் முகாமைத்துவ
    - டிஜிஎம் விவசாயம்
  - டிஜிஎம் வடித்தல்
    - டிஜிஎம் வடித்தல் பரிபாலனம்
    - எம் ஜிஆர் - தொழிற்சாலை

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - பெலவத்த



**முதலாவது வரிசை**

டீ.எம்.ஏ. திசாநாயக்க – மேலதிக உதவி பொது முகாமையாளர (நிதி), டி.எம்.எஸ் - பண்டார - பிரதிப் பொது முகாமையாளர் (விவசாயம்)
சமன் குமார – தலைமை செயற்பாட்டு உத்தியோகத்தர், மேஜர் ஜெனரல். (ஓய்வு) எஸ்.எம்.எஸ்.பீ.பி.சமரகோன் – தலைவர்
காமினி ரஸபுத்திர - பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், ரவிந்ா ஹெட்டியரச்சி – மேலதிக உதவி பொது முகாமையாளர் (வடிசாலை)
எல்.கலகம்ஆரச்சி - உதவி பொது முகாமையாளர் (மனிதவளம்), ஆர்.எம்.டபிள்யூ. ஹேமகுமார - துணை பொது முகாமையாளர் (தொழிற்சாலை)

# நிறுவனத்தின் கட்டமைப்பு - செவனகல



# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - செவனகல



**முதலாவது வரிசை**

டபிள்யூ.ஏ.எம்.சாந்தனி (காணி முகாமையாளர்) , ஆர்.எம்.ஞானவதி (அலுவலக நிறைவேற்றுனர்) , பீ.எஸ்.கயனி பீரிஸ் (கணக்காளர்) , டீ.கே.டபிள்யூ. த சில்வா (ஆலோசகர் தொழிற்சாலை) , எம்.டீ.என்.சேபால (ஆலோசகர் கணக்காய்வு) , கீர்த்தி பதிரணகே (பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர் – உயிர் உர செயற்திட்டம்) , மேஜர் ஜெனரல் சாரத சமரகோன் (தலைவர்) , காமினி ராசபுத்ர (பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்) , எச்.எம்.எஸ்.சமரவீர (ஆலோசகர் – விவசாயம்) , ஐ.ஜே.சத்தரசிங்க (பிரதிப் பொது முகாமையாளர் – மனித வளம்) , கே.டீ.என்.பெரேரா (பிரதிப் பொது முகாமையாளர் – நிதி) , ஜே.பி.பி.கே.ஜயரத்ன (ஆய்வுகூட பொறியியலாளர்) , பி.ஏ.லக்மா (கணக்காளர்) , எச்.என்.ஆர்.விஜேதுங்க (முகாமையாளர் – மனித வளம்)

**இரண்டாவது வரிசை**

டி.டி.சி.பண்டிதகே (பயிராக்கவியலாளர்) , டி.எம்.பி.ஜே.ரத்னாயக்க (இயந்திரவியல் உத்தியோகத்தர்) , டீ.எல்.கருசிங்க (போக்குவரத்து முகாமையாளர்) , ஜீ.அனுர (இரசாயனவியல் பொறியியலாளர்) , டபிள்யூ.எம்.பி.பி.கே.டபிள்யூ.ரணசிங்க (உதவி முகாமையாளர்) , பி.கே.அனுர (பாதுகாப்பு முகாமையாளர்) , கே.ஜே.சீ.ஆர்.ஜயசேகர (முகாமையாளர் சட்டம் மற்றும் காணி) , டி.சி.ஹெட்டிஆரச்சி (பிரதிப் பொது முகாமையாளர் – தொழிற்சாலை) , ஆர்.எம்.டி.எல்,ஹேமபால (விசாரணை உத்தியோகத்தர்) , எம்.யூ.குமார (முகாமையாளர் விவசாய விரிவாக்கல்) , என்.ஏ.எச்.கே.அத்துல சிரிவர்தன (பொது முகாமையாளர்) , எம்,டபிள்யூ.எஸ்.ஆர்.ஜயலத் (இயந்திரவியல் பொறியியலாளர் – தொழிற்சாலை வேலைத்தளம்) , எம்.கே.எஸ்.பிரியந்த (பிரதிப் பொது முகாமையாளர் – விவசாயம்) , ரி.டி.கே.பி.சமன் குமார (விவசாய உத்தியோகத்தர்)

**மூன்றாவது வரிசை**

டபிள்யூ.சி.விஜேநாயக்க (விவசாய உத்தியோகத்தர்) , ஏ.டபிள்யூ.கே.பி.சி.கே.செனவிரத்ன (விவசாய விரிவாக்கல்) , எம்.டி.சந்திரபால (இயந்திரவியல் உத்தியோகத்தர்) , டபிள்யூ.யு.ஜீ.கருணாரத்ன (விவசாய பொறியியலாளர்) , ஈ.ஏ.பி.சி.எதிரிசிங்க (விவசாய உத்தியோகத்தர்) , டபிள்யூ.பி.எஸ்.என்.வர்ணகுல (முகாமையாளர் உற்பத்தி) , கே.உபுல் (விவசாய உத்தியோகத்தர்) , ஜீ.ஆர்.பி,குமார (முகாமையாளர் விவசாயம்)

## முகாமைத்துவக் குழு - பெல்வத்த



**பிரதி பொது முகாமையாளர் (தொழிற்சாலை)**
ஆர்.எம்.டபிள்யூ. ஹேமகுமார



**மேலதிக உதவி பொது முகாமையாளர் (வடிசாலை)**
ரவிந்ரா ஹெட்டியரச்சி



**பிரதிப் பொது முகாமையாளர் (விவசாயம்)**
திரு. டி.எம்.எஸ். பண்டாரா

## முகாமைத்துவக் குழு - செவனகல



**பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்சாலை)**
டீ.சீ. ஹெட்டிஆராச்சி



**உதவி பொது முகாமையாளர் (வேளாண்மை)**
சுகத் பிரியந்த

எஸ்பிசீஜி/எச்எம்/சீ/எவ்ஏ/எல்எஸ்சீபீஎல்/2023/04 2023 ஒக்தோபர் 06

தலைவர்,

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனி.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **மறுப்பு அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானவரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்படும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்தி-ற்கான அடிப்படை எனும் பந்தியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

1.2 **மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெல்வத்த பிரிவுக்கு சொந்தமான ரூபா 2,463,859,790 ஆன சீனி இருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிராததுடன், அந்த மீதியின் சரியான தன்மை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பெல்வத்த சீனித் தொழிற்சாலையை அரசாங்கத்திற்கு பொறுப்பேற்கும் போது அதிலிருந்து நீங்கி தனியான-தொரு நிறுவனமொன்றாக பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்றுக்கு உரிய 20 உழவு இயந்திரங்கள் 2011 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தியமைக்காக அந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 65,386,355 ஆன தேறிய மீதி மற்றும் அந்த நிறுவனத்தினால் கம்பனிக்கு ரிய உத்தியோகபூர்வ இல்லத்தினை பயன்படுத்தியமைக்காக பெற வேண்டிய ரூபா 19,601,068 தொகை நிதிக்கூற்று-க்களில் காண்பிக்கப்படுகின்ற போதிலும், அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை உடன்படிக்கை அல்லது மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விரிவான வருமானக் கூற்றில் நிர்வாகச் செலவினம் ரூபா 3,569,167,999 இற்காக விரிவான பதிவொன்று நிதிக்கூற்றுகளின் தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெல்வத்த பிரிவில் நிறுவப்பட்டுள்ள வடிசாலை திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 760,763,818 ஆன நிலையான சொத்துகளுக்குரிய ஒவ்வொரு சொத்து தொகுதிகளினதும் கூட்டுத்தொகை மாத்திரம் நிலையான சொத்-துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால், அந்த பெறுமதியை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்ட காரணத்தால் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ஆகியவற்றின் சரியான தன்மையை கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(உ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரி-க்கும் போது பயன்படுத்தப்படும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். செவனகல பிரிவிற்கு உரியதாக லங்கா காபோலிக் இன்வெஸ்டட் கம்பனியிலிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,473,696 தொகையும், 2014 ஆம் ஆண்டு அறவிடப்பட வேண்டிய கந்தளாய் சீனிக் கம்பனியின் ரூபா 6,002,360 தொகை மற்றும் ஞஉஞீ பதுளை செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,665,725 தொகை ஐயக்கடன் ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த ஒதுக்கங்களுக்கு காரமாக அமைந்த விடயங்கள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) செவனகல மற்றும் பெல்வத்த பிரிவில் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொ-ாண்டுவரப்பட்டவாறு காணப்படும் முறையே ரூபா 9,475,416 மற்றும் ரூபா 4,904,160 தொகையான வழியிலுள்ள இருப்பு தொடர்பில் கடந்த வருடங்களின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமாகவும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்க-ப்பட்டிருக்கவில்லை.

(எ) பெல்வத்த பிரிவினால் பயன்படுத்தப்படும் சுமார் 1.212 ஹெக்டேயர்கள் பரப்பளவான படல்கும்புர கரும்பு கொள்வனவு நிலையத்தின் விற்கும் உரித்து கம்பனியிடம் காணப்படாத போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஏ) பெல்வத்த பிரிவிலிருந்து 2022 யூலை மாத்தில் 02 சந்தர்ப்பங்களில் செவனகல பிரிவிற்கு கொண்டு செல்லப்பட்ட ரூபா 5,359,848 பெறுமதியான 12792 லீட்டர் ஸ்பிரிட், செவனகல பிரிவிற்கு கிடைத்தமைக்கான சான்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஐ) பெல்வத்த பிரிவிற்கு சொந்தமான குத்தகை சொத்துக்களுடன் ரூபா 3,507,888,055 கிரயமான கள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பெறுமான தேய்வு விகிதம் முறையே 15, 6 மற்றும் 5 ஆக காணப்பட்ட போதிலும், ரூபா 1,682,142,372 கிரயமான சொத்துக்கள் 2 முதல் 50 சதவீதம் வரையான பல்வேறு வீதங்களின் கீழ் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டுக்குரிய பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ஆகியவற்றின் சரியான தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஒ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அதற்கமைய தொடர்ந்தும் பயன்பாட்டில் காணப்படும் செவனகல பிரிவிற்குரிய ரூபா 386,601,213 கிரயமான மற்றும் பெல்வத்த பிரிவிற்கு சொந்தமான ரூபா 1,745,910,345 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், அந்த மதிப்பிடப்பட்ட வழு இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீள்திருத்தப்பட்டு சரியான கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செவனகல பிரிவின் பௌதீக இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 2,764,156,341 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் இந்த பெறுமதி ரூபா 3,675,660,095 என இறுதி இருப்பு ரூபா 911,503,754 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு நியமமொன்றின் அங்கீகாரம் அல்லது தேவைப்பாட்டின் அடிப்படையில் அல்லாத போது நிறுவனமொன்றின் வருமானம் மற்றும் செலவினம் ஈடு செய்யப்படக் கூடாத போதிலும், மீளாய்வாண்டுக்கு உரியதாக பெல்வத்த பிரிவு ரூபா 3,406,051,222 ஆன வருமானம் மற்றும் செலவினத்தை ஈடுசெய்து நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்தது.

(க) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் செவனகல பிரிவினால் வியாபார வளங்கள் திட்டமிடல் கட்டமைப்பு (நுசீஞலளவநஅ) இற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 30,544,015 ஆன போதிலும், அது ரூபா 35,650,647 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(கா) மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாணம் ஆகியவற்றுக்காக 2014 ஆம் ஆண்டு முதல் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 645,635,024 ஆன தொகை அரச மானியமாக கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக குறித்த சொத்துக்களின் நிர்மாணம் / கொள்வனவு நிறைவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த அரச மானியங்கள் தொடர்பில் இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் அரச மானியங்கள் அந்த பெறுமதியால் அதிகரித்தும் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டங்கள் அந்த அளவினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செவனகல பிரிவின் கள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களின் பெறுமதியான ரூபா 103,209,010 கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் நீர்ப்பாசன மற்றும் ஏனைய பெறுமானத் தேய்வு ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் கள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய பெறுமதி ரூபா 103,209,010 இனால் அதிகரித்தும், நீர்ப்பாசன மற்றும் ஏனைய சொத்துக்களின் பெறுமதி அதற்கு சமனான பெறுமதியாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) 2012 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் விளைதிறன் அபிவிருத்தி அமைச்சு, மொனராகல மற்றும் ஹம்பாந்தோட்ட மாவட்ட செயலகங்களின் மூலம் ரூபா 819,520,305 தொகையான செயற்படு மூலதன தேவைப்பாட்டுக்காக அரசாங்க மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த அரச மானியங்கள் இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் கணக்கு வைக்கப்பட்டிராத காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டம் அந்த அளவினால் குறைத்தும், மூலதன மானியங்கள் அந்த அளவினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம், இருப்பு விநியோகித்தல், முன் வந்தவை முன் விநியோகித்தல் முறையில் அல்லது பசுமை சராசரி முறையில் விலையிடப்பட வேண்டிய போதிலும், பெல்வத்த பிரிவினால் குறைபாடுகளுடனான மொன்பொருட்களை பயன்படுத்தி இருப்பினை இறுதியாக கொள்வனவு செய்த விலையின் அடிப்படையில் இருப்பு விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கிரயம் மற்றும் விநியோக விலை ஆகியவற்றுக்கிடையே ஏற்பட்டிருந்த ரூபா 25,176,099 ஆன வேறுபாடு மதிப்பீடு திருத்தக் கணக்கின் மூலம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(கூ) 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களில் 05 சந்தர்ப்பங்களில் கம்பனியின் பெல்வத்த பிரிவிலிருந்து செவனகல பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 7,487,688 பெறுமதியான 32,136 திராவகம் 2022 ஆம் ஆண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்படாது மீளாய்வர்டின் போது தொடர்புடைய கம்பனி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக ஏனைய பெற வேண்டியவை மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டம் ரூபா 7,487,688 படியாக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கெ) மீளாய்வாண்டின் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் செவனகல பிரிவின் களஞ்சியங்களில் ரூபா 6,777,664 பெறுமதியான 306 இருப்பு உருப்படிகளின் பற்றாக்குறையொன்று மற்றும் ரூபா 5,192,624 பெறுமதியான இருப்பு உருப்படிகளின் மிகையொன்றும் அவதானிக்கப்பட்ட போதிலும், அதற்காக நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பௌதீக மெய்மையாய்வுக்கு உட்படுத்தப்பட்ட பெறுமதி மதிப்பிட முடியாத இருப்பின் 1195 வகைகளும், பயன்படுத்த முடியாது கைத்தவிர்க்கப்பட வேண்டிய ரூபா 4,044,995 பெறுமதியான 504 இருப்பு உருப்படிகளும் களஞ்சியத்தில் காணப்பட்டன. அந்த இருப்புகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்படவில்லை.

மேலே விவரிக்கப்பட்டுள்ள வகையில், நிதி நிலைமைக் கூற்றில், நிதி செயல்பாட்டுக் கூற்றில், உரிமை மாற்றம் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட போதுமான அளவு உருப்படிகளை மாற்று முறைமை மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது சரி பார்ப்பதற்கு எனக்கு முடியவில்லை. இதன் காரணமாக, நிதி நிலைமைக் கூற்று, நிதி செயல்பாட்டுக் கூற்று, உரிமை மாற்றம் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் பெறுமதி அல்லது உருப்படிகளின் அறிக்கை அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஏதேனும் சீராக்கம் செய்யப்பட வேண்டுமா என எனக்குத் தீர்மானிக்க முடியவில்லை.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியினைத் தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கான திறனை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன், முகாமைத்துவம் கம்பனியை கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயல்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணகிகரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனியின் தொடர்ந்து இயங்குவதற்கு உரியதான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயல்பாடுகள் தொடர்பாகப் பரீட்சிப்பு செய்யும் பொறுப்பு, நிர்வாகத் தரப்பினரினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனிஅதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

02. **ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தனவா என்பதை தீர்மானிக்க முடியாதிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் (இ), (உ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ) மற்றும் (க) ஆகிய பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கு வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால்செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் கம்பனி இணங்கியொழுகாதுள்ளமையை.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்**<br><br>**சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 (அ) பிரிவினால் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அமைச்சரால் 2008 சனவரி 25 ஆந் திகதி 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையின் 1 ஆம் பிரிவின் 30 ஆம் கட்டளை | கம்பனி சீனி உற்பத்தி அல்லது சீனியை சுத்திகரித்தல் தொடர்பில் வருடாந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் இலக்கம் 371(02) மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பதவிநிலை தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆக ஆகக் கூடிய தொகையினை கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்படக்கூடிய போதிலும், அதற்கு முரணாக நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கட்டுமானப் பணியொன்றுக்காக சிவில் பராமரிப்பு முகாமையாளருக்கு ரூபா 5,310,000 ஆன முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியளவில் குறித்த பணி நிறைவு செய்யப்பட்டு 05 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அந்த கட்டுநிதித் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இதற்காக கட்டுமானப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை நடைமுறையை பின்பற்றாது கம்பனியின் சிவில் பராமரிப்பு முகாமையாளரின் விருப்பின் அடிப்படையில் ரூபா 5,130,000 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய கம்பனிக்கு உரித்தற்ற கட்டிடமொன்றை புதுப்பிப்பதற்காக ரூபா 5,310,000 அரச நிதி செலவிடப்பட்டிருந்ததுடன், கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் விருப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை<br>(i) XIX அத்தியாயத்தின் 5.1 ஆம் பந்தி | பெல்வத்த பிரிவின் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன், அந்த இல்லங்களின் திருத்தல் வேலைகள் மற்றும் பராமரிப்பு என்பன கம்பனியால் ஏற்கப்பட்டிருந்தது. |
| (ii) XIX அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தி | மாதாந்த வீட்டு வாடகையை ஊழியரின் சம்பளத்தின் சதவீதமாக அறவிடப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் செவனகல பிரிவினால் அதற்கமைய நடவடிக்கை எடுக்காது மாதாந்தம் ரூபா 100 இற்கும் ரூபா 850 இற்கும் இடைப்பட்ட பல்வேறு தொகைகளில் பெயரளவுக் கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது. |
| (iii) XIX அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தி | தண்ணீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் ஆகியவை உத்தியோகத்தரினாலேயே செலுத்தப்பட வேண்டும் என்றாலும், செவனகல பிரிவில் 60 யூனிட்டுகளுக்கு மேல் தண்ணீர் பயன்படுத்தினால் மட்டுமே அந்த உத்தியோகத்தரிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் முறையைக் கடைப்பிடித்து, மாதாந்திரச் சலுகையாக ரூபா 250 மின் நுகர்வுக்கு வழங்கிய பின்னர் மீதமுள்ள மின் கட்டணத்தை சம்பளத்தில் இருந்து அறவிடுவதன் மூலம் மீளாய்வாண்டில் கம்பனியின் உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா. 11,349,170 தொகையான தனிப்பட்ட பட்டியல்கள் கம்பனியின் நிதியினை பயன்படுத்தி தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய PED 04/2023 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 1.1 ஆம் பந்தி | தொடர்படைய பந்திக்கமைய செவனகல பிரிவின் மற்றும் தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டுக்கு உரியதாக செலுத்தக்கூடிய மிகையூதியம் ரூபா 27,255,000 ஆன போதிலும், மிகையூதியம் மற்றும் ஊக்குவிப்புப் படிகளாக ரூபா 133,572,776 செலுத்தப்பட்டிருந்த காரணத்தால் மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 106,347,776 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |
| ii) 1.2 ஆம் பந்தி | |
| (உ) 2023 மே 16 ஆந் திகதிய 01/2021(ை) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2021 நவம்பர் 11 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்காக செயற்பாட்டு கையேட்டின் 6.9 ஆம் பந்தி | பொது முயற்சிகளால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனிக்கு பெற வேண்டிய பணம் / நட்டத்தினை பதிவழிக்கும் போது பணிப்பாளர் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அந்த ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாது மீளாய்வாண்டின் போது ரூபா 473,274,504 ஆன பதிவழிப்பினை மேற்கொண்டிருந்தது. |
| (ஊ) 2022 சனவரி 14 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளுக்குரிய 22 உத்தியோகத்தர்களுக்காக 34,777 லீட்டர் எரிபொருள் மேலதிகமாக வழங்கப்பட்டு, அதற்காக ரூபா 11,782,196 செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர கம்பனியின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், காலவரையறைகளினுள் உரிய சட்டங்களுக்கு இணங்கி பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

2.3 **ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

(அ) செவனகல தொழிற்சாலையின் இயலளவினை அதிகரிக்கும் செயற்திட்டம் 2023 ஏப்ரல் 23 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டம் 2024 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலைக்கு உள்ளாக்கப்பட்டிராததுடன், ரூபா 201,782,433 தொகையான இயந்திரங்களின் உத்தரவாதக் காலம் நிறைவடைந்திருந்தது. இயந்திரங்களை இறக்குமதி செய்யும் நடைமுறையின் நலிவுகள் காரணமாக ரூபா 3,622,055 ஆன தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறையை பின்பற்றாது ரூபா 7,723,058 தொகையான இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், இயந்திரங்களை பொருத்துவதற்காக இந்தியாவிலிருந்து வருகைதந்த வழங்குநரின் ஊழியர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2,824,704 செல விடப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியின் பெல்வத்த மற்றும் செவனகல அலகுகளின் பொயிலர்களுக்காக உலை எரியெண்ணெய் கொள்வனவானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படாது, பெறுகை நடைமுறையை பின்பற்றாது வழங்குநரால் சுத்திகரிக்கப்பட்ட உலை எரியெண்ணெய்க்கு பதிலாக சுத்திகரிக்கப்படாத கம்பல் மற்றும் இயந்திரங்களிலிருந்து அகற்றப்படும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 341,687,582 செலுத்தப்பட்டிருந்தது. அந்த எண்ணெய் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பொயிலர் தொடர்ச்சியாக செயலிழந்து காணப்பட்டதுடன், அவ்வாறு செயலிழந்து காணப்பட்ட 46 நாட்களினுள் ரூபா 300 மில்லியன் பெறுமதியான 6000 லீட்டர் எதனோல் உற்பத்தியை கம்பனி இழந்திருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னரான ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 செயற்திட்டங்கள் முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன், அந்த 11 செயற்திட்டங்களுக்காக 2022 மார்ச் மாத இறுதியில் ரூபா 176,665,880 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 09 முதல் 13 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்ததுடன், அந்த செயற்திட்டங்களை நிறைவு செய்ய முடியாது போயிருந்தது. அதற்கமைய செலவிடப்பட்டிருந்த ரூபா 176 மில்லியன் செலவினம் விளைவற்ற செலவினமொன்றாகியிருந்ததுடன், கம்பனி எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாது போயிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டு வ.ஃப லங்கா சீனி கம்பனியின் பெல்வத்த பிரிவினை அரசாங்கத்திற்கு சுவீகரித்த பின்னர் கம்பனியினால் அந்த அலகிற்காக பதவியணி தேவைப்பாடு (ஊயனசந) இனங்காணப்பட்டு, பொது திறைசேரியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பதவியணியை அங்கீகரிப்பதற்கு மற்றும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது 2021.ஃ.2011 ஆம் ஆண்டுகளின் போது முறையற்ற விதத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் 159 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அவ்வாறே 510 ஊழியர்களுக்கு தகைமைகள் மற்றும் அனுபவம் ஆகிய முறையான நடைமுறையை பின்பற்றாது பரிசோதிக்காது பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(உ) கம்பனியின் செவனகல பிரிவின் வடிசாலைக்கு தேவையான ஸ்டீம் (ளுவநயஅ) இயந்திரத்தினை பெற்று கொள்வதற்காக வெளிவாரி நபர் ஒருவருக்கு உரிய பயோ மாஸ் பொய்லர் ஒன்று நிறுவனத்தினுள் நிறுவப்பட்டு வருடாந்தம் தேவையான ஸ்டீம் 32,400 மெட்ரிக் தான் அளவானது ரூபா 317,520,000 தொகைக்கு பெற்றுக்கொள்ள உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் உரிய வழங்குநரை தெரிவு செய்யும்போது முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயல் திட்டத்திற்காக தொழிற்சாலையின் மதியுரையாளரினால் போலியாக தயாரிக்கப்பட்ட தரவுகளை உள்ளடக்கிய கிரய நலன் பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2024 ஆகஸ்ட் 07 ஆம் திகதி வரையிலும் குறித்த செயற்திட்டத்தினை செயல்படு நிலைமைக்கு உள்ளாக்கியிராத போதிலும் வழங்குனருக்கு ரூபா 48,600,000 தொகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கம்பனியின் பணிகள் தொடர்பில் தொடர்பற்ற வெளிவாரி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கம்பனியின் விடுதிகளில் உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கியமைக்காக 2020 ஜனவரி முதல் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் ரூபா 10,260,433 செலவிடப்பட்டிருந்தது.

(எ) செவனகல பிரிவிற்கு சொந்தமான வங்கி நடைமுறை கணக்கொன்றில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ள படியாக ரூபா 4,958,247 ஆன தொகை நிலவியதுடன் 2013 ஜூன் 04 திகதியின் பின்னர் அந்த கணக்கின் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. அந்தப் பணத்தினை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டு இருந்தது.

(ஏ) கரும்பு பயிற்சியைக்காக கம்பனியினால் ரூபா 1,262,363,910 ஆன கடன் பெற்றுக்கொண்ட விவசாயிகளிட மிருந்து கரும்பு விளைச்சலுக்கு புறம்பாக வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டிருந்த 159 விவசாயிகளுக்கு மீண்டும் கரும்பு செய்கையில் ஈடுபடுத்துவதற்கு மற்றும் அந்த கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பெற வேண்டிய விவசாய கடன்களிலிருந்து ரூபா 61,527,826 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான கடனாக காணப்படுவதுடன் ரூபா 77,719,383 தொகையானது 03 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கு உரிய கடன் மீதிகள் ஆகும்.

(ஐ) செவனகல பிரிவிலிருந்து பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 18 வாகனங்களுக்கு உரியதாக ரூபா 13,041,107 தொகையான 2284 உபகரண தொகுதிகள் மற்றும் பண்டங்கள் மற்றும் களஞ்சியத்தினுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ரூபா 85,305,687 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் பண்டங்களின் 6269 தொகுதிகள் உரிய முறையில் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) செவனகல பிரிவின் பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட திறந்த சந்தையின் பெறுமதி ரூபா 560,700 தொகையான பித்தளை மற்றும் செப்பு அகியவற்றின் 1486 கிலோகிராம்கள் பற்றாக்குறையொன்று நிலவியது.

(ஓ) பெல்வத்த பிரிவினால் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் இருப்பு மெய்மையாய்வு சந்தர்ப்பம் வரையிலும் கொள்வனவு செய்தவரால் எடுத்துச் செல்லப்பட்டிராத 2626 மெட்ரிக் தோன் சீனி களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், மூன்றாம் தரப்பினருக்கு உரித்தான இந்த இருப்பிற்காக கம்பனியினால் 04 முதல் 48 நாட்கள் வரையிலான காலம் களஞ்சிய வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் விற்பனை பெறுமதி ரூபா 885,962,222 தொகையான மூன்றாம் தரப்பினருக்கு சொந்தமான இருப்புக்களை களஞ்சியத்தில் வைத்திருத்தல் மூலம் கம்பனியினால் களஞ்சியத்திற்கு கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் அச்சுறுத்தல் நிலவுகின்றமை மற்றும் ரூபா 7,589,750 தொகையான தாமத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பெல்வத்த பிரிவுக்கு சொந்தமான உரக்கிடங்கினுள் சீனியை வெண்மை நிறம் ஆக்குவதற்கு பயன்படுத்தப்படும் ரூபா 1,174,216 கிரயமான "சல்பர்" இரசாயனம் 19,695 கிலோகிராம்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த சல்பர் இருப்பு காலாவதியடைந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகி இருந்தது.

(க) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கைத்தவிர்ப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த காலாவதியான ரூபா 6,051,597 கிரயமான 900 கிலோ கிராம் ஷெல்கிரீஸ், 60 லீட்டர் 2வு எண்ணெய் மற்றும் 560 லீட்டர் மெரோபா ஆகிய எரிபொருள்கள் களஞ்சிய வளாகத்தில் காணப்பட்டன அதற்கமைய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கா) கம்பனியின் பெல்வத்த பிரிவில் 4.607 ஹெக்டெயர் பரப்பளவான 4 காணிகளின் கிரயமான ரூபா 44,149,728 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் ரூபா 28,050,728 கிரயமான பெல்வத்த மற்றும் தலைமை அலுவலகம் அமைந்துள்ள 1.686 ஹெக்டெயர் பரப்பளவான காணியின் உரித்து கம்பனியிடம் காணப்படவில்லை.

(கி) 2018 ஆம் ஆண்டின் போது செவனகல பிரிவினால் ரூபா 9,564,866 பெறுமதியான ஆவியாக்குதல் இயந்திரம் (நுஎயிழசயவழச) இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ரூபா 3,924,394 தொகையான சுங்க கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய உதிரி பாகங்கள் (ளு஌ வுரடிந) அமைப்பு குறிப்பீடுகளுக்கு இணங்காமையின் அடிப்படையில் மீள அனுப்பப்பட்டு 2019 ஆம் ஆண்டு மீண்டும் இறக்குமதி செய்யும் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,830,446 தொகையான சுங்க கட்டணத்தை வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அந்த பெறுமதி கம்பனிக்கு நட்டமாகியிருந்தது.

(கீ) செவனங்கள பிரிவிற்குச் சொந்தமான தொகுதி இலக்கம் 04 (கொவுல் ஆர) மற்றும் தொகுதி இலக்கம் 05 (கினிகல்பெலஸ்ஸ) ஆகியவற்றுக்குச் சொந்தமான 1072.89 ஹெக்டேயர்கள் பரப்பளவில் 74.21 ஹெக்டேயர்கள் பரப்பளவானது அத்துமீறிய பயிர்ச்செய்கைகள் மற்றும் 8.32 ஹெக்டேயர் ஆனது அத்துமீறிய கட்டுமானங்கள் (வீடுகள் மற்றும் வர்த்தக கட்டிடங்கள்) ஆகியவை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(கு) செவனகல பிரிவின் 2023 ஆம் ஆண்டின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளுக்காக 276015 கிலோ கிராம் சீனி ரூபா 65 எனும் விலைக்கு மற்றும் 208195 கிலோ கிராம் சீனி ரூபா 170 எனும் விலைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் ஒரு கிலோ கிராம் சீனியின் உற்பத்தி கிரயமானது ரூபா 262.69 ஆக காணப்பட்டதுடன் உற்பத்தி கிரயத்தினை உள்ளடக்காத வகையில் குறித்த விலைகளில் சீனி இருப்பினை வழங்கியமையால் கம்பனிக்கு ரூபா 73,863,484 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(கூ) தேவையை உரிய முறையில் இனம் காணாது களஞ்சிய உருப்படிகளை கொள்வனவு செய்திருந்தமையால் செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளில் முறையே ரூபா 85,305,687 பெறுமதியான 6269 இருப்பு உருப்படிகள் மற்றும் ரூபா 48,348,295 பெறுமதியான 1662 இருப்பு உறுப்படிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன.

(கெ) பெல்வத்த பிரிவில் 2013 ஆம் ஆண்டில் குத்தகை வசதியின் கீழ் ரூபா 128,910,000 தொகைக்கு கிரேன் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 120,750,000 தொகை மற்றும் அதற்குத் தேவையான மின்சார இணைப்பிற்கு ரூபா 2,254,850 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் வழங்குநரால் இணங்கிய பிரகாரம் அந்த இயந்திரத்தினை தொழிற்சாலையினுள் நிறுவ முடியாத காரணத்தால் ரூபா 123,004,850 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த இயந்திரமானது கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்று காணப்பட்டது.

(கே) இலங்கை சீனி கம்பெனியின் தலைமை அலுவலகத்தால் 5000 மெட்ரிக் தொன் மெலாசஸ் இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திர கட்டணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 4,445,682 தொகை 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன், கம்பனி மேலோசஸ் இறக்குமதி செய்யாத காரணத்தால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமானது விளைவற்ற செலவினமாக இருந்தது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**

**இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக்கூற்று**

**2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | குறிப்பு | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | 4 | 16,095,088,733 | 19,287,059,633 |
| விற்பனைக் கிரயம் | | (10,514,186,029) | (10,550,156,934) |
| **மொத்த இலாபம்** | | 5,580,902,704 | 8,736,902,699 |
| ஏனைய வருமானம் மற்றும் வருவாய் | 5 | 233,273,792 | 207,049,922 |
| நிருவாகச் செலவினம் | | (3,566,423,815) | (3,352,575,449) |
| நிதிச் செலவினம் | 6 | (69,120,741) | (87,338,394) |
| நிதி வருமானம் | 6 | 656,487,028 | 541,537,093 |
| **வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்)** | 7 | 2,835,118,969 | 6,045,575,871 |
| வருமான வரிச் செலவு | 8 | (502,837,242) | (1,131,502,649) |
| **வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)** | | 2,332,281,727 | 4,914,073,222 |
| **காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி** | | (199,122,893) | (125,052,954) |
| **காலப்பகுதிக்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/ (செலவினம்), தேறிய வரி** | | 2,133,158,834 | 4,789,020,268 |
| பங்கு ஒன்றிற்கான உழைப்பு/(நட்டம்) | 9 | 23,322,817 | 49,140,732 |

42 ஆம் பக்கம் முதல் 62 ஆம் பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதியாகும்

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**

**நிதி நிலைமைக் கூற்று**
**2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான**

| சொத்துக்கள் | குறிப்பு | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10 | 3,640,993,724 | 2,435,563,340 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 8 | - | 43,544,918 |
| | | **3,640,993,724** | **2,479,108,258** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 11 | 8,311,492,472 | 4,961,314,936 |
| உயிரியல் சொத்துக்கள் | 12 | 707,948,224 | 890,667,065 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 13 | 1,036,246,085 | 611,771,676 |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | | 182,674,824 | 148,669,124 |
| விவசாயிகளிடமிருந்து வருமதியான கடன்கள் | 14 | 1,559,543,843 | 1,463,467,286 |
| சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வருமதியான தொகை | 25.1 | - | - |
| முதலீடுகள் | 15 | 2,033,318,775 | 1,237,947,390 |
| காசும் காசிற்குச் சமமானவையும் | 21 | 1,155,347,328 | 3,972,130,456 |
| | | 14,986,571,552 | 13,285,967,934 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **18,627,565,275** | **15,765,076,191** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 16 | 1,000 | 1,000 |
| அரசாங்க மானியம் | 17 | 4,674,488,363 | 4,674,488,363 |
| பகிரப்படாத இலாபம் | | 6,635,015,716 | 6,573,568,061 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **11,309,505,079** | **11,248,057,424** |

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**
**நிதி நிலைமைக் கூற்று**
**2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான**

| | குறிப்பு | 2023 | 2022 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள் | 8 | 744,153,029 | 580,381,458 |
| இளைப்பாறல் நலப் பொறுப்புகள் | 19 | 1,118,049,383 | 814,574,021 |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள் | 18 | 40,773,733 | 128,784,134 |
| | | 1,902,976,146 | 1,523,739,613 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள் | 18 | 95,585,542 | 128,842,356 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 20 | 3,659,478,097 | 2,292,075,108 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 1,168,506,338 | 1,207,048,360 |
| சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நிலுவையான தொகை | | 142,084,771 | (634,686,671) |
| வங்கி மேலதிகப்பற்று | | 349,429,306 | - |
| | | 5,415,084,054 | 2,993,279,153 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **18,627,565,275** | **15,765,076,191** |

.......................................................
பிரதி பொது முகாமையாளர் - நிதி

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குதல் பணிப்பாளர்கள் பொறுப்பாகும். குழு சார்பில் கையொப்பமிட்டவர் :

--------------------
எஸ்.எம்.எஸ்.பீ.பி.சமரகோன்
தலைவர்/பணிப்பாளர்-லங்கா சீனி (தனியார்) கம்பனி

---------------------------
காமினி ரசபுத்திர
பணிப்பாளர்/பி.நி.உ-லங்கா சீனி (தனியார்) கம்பனி

19.11.2024
கொழும்பு

42 ஆம் பக்கம் முதல் 62 பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்க-ளின் உள்ளார்ந்த பகுதியாகும்.

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**
**உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று**

**2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | **கூறப்பட்ட மூலதனம்** | **அரசாங்க மானியம்** | **ஒன்று திரட்டப்பட்ட இலாபங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| **2022 ஜனவரி 1 இல் உள்ளவாறானது** | 1,000 | 4,674,488,363 | 1,535,883,363 | 6,210,372,726 |
| அரச மானிய மீள் கொடுப்பனவு | - | - | - | - |
| NBT பொறுப்பு மீள் பதிவு | - | - | 109,138,256 | 109,138,256 |
| விவசாயிகள் நலன் ஏற்பாடு மீள் பதிவு | - | - | 139,526,174 | 139,526,174 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - |
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | - | - | 4,914,073,222 | 4,914,073,222 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | (125,052,954) | (125,052,954) |
| மொத்த விரிவான வருமானம் | - | - | 4,789,020,268 | 4,789,020,268 |
| **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | 1,000 | 4,674,488,363 | 6,573,568,061 | 11,248,057,424 |
| அரச மானிய பெறுகை | - | - | - | - |
| பங்கிலாபக் கொடுப்பனவு - 2020 | - | - | (351,570,485) | (351,570,485) |
| பங்கிலாபக் கொடுப்பனவு - 2021 | | | (245,918,727) | (245,918,727) |
| பங்கிலாபக் கொடுப்பனவு - 2022 | | | (1,474,221,184) | (1,474,221,184) |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 2,332,281,727 | 2,332,281,727 |
| அமைச்சிடம் இருந்து கிடைத்த நிதி – 2020/21 | | | - | - |
| ஏனைய விரிவான வருமானம் | | | (199,122,893) | (199,122,893) |
| மொத்த விரிவான வருமானம் | - | - | 2,133,158,834 | 2,133,158,834 |
| **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | 1,000 | 4,674,488,363 | 6,635,015,716 | 11,309,505,079 |

42 முதல் 62 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளார்ந்த பகுதியாகும்.

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**
**காசுப்பாய்ச்சற் கூற்று**
**2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | குறிப்பு | **2023** | **2022** |
|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** |
| வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) | | 2,835,118,969 | 6,045,575,871 |
| **சீராக்கங்கள் :** | | | |
| பெறுமானத் தேய்வு | 10 | 445,264,798 | 378,551,821 |
| ஆதன, இயந்திர உபகரண விற்பனை நட்டம் | | | - |
| நிதி வருமானம் | 6 | (656,487,028) | (541,537,093) |
| நிதிச் செலவு | 6 | 69.120.741 | 87,338,394 |
| ஓய்வூதிய நலன் பொறுப்பிற்கான ஏற்பாடு | 19 | 206,549,761 | 122,333,520 |
| விவசாயிகளின் கடன்களுக்கான ஏற்பாடு | 11 | (458,330,841) | (3,618,596) |
| முன்னைய ஆண்டு சீராக்கல் ஐயக்கடன் | | - | 248,664,430 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 2,441,236,399 | 6,337,308,347 |
| பொருட் பட்டியல்களிலான (அதிகரிப்பு) /குறைவு | | (3,350,177,536) | (2,345,626,124) |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப் பெறவேண்டியவைகளிலான அதிகரிப்பு | | (458,480,109) | (337,845,786) |
| விவசாயிகளிடமிருந்தான கடன்களிலான குறைவு | | 362,254,284 | (450,055,042) |
| தொடர்புடைய தரப்பினரிலான அதிகரிப்பு / (குறைவு) | | 776,771,442 | (612,498,720) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளிலான அதிகரிப்பு/(குறைவு) | | 861,460,804 | (15,920,581) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | | 633,065,284 | 2,575,362,094 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (345,887,473) | - |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய நலன் பொறுப்பு | 19 | (102,197,292) | (23,809,975) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | | 184,980,519 | 2,551,552,119 |
| ஆதன, இயந்திர உபகரணக் கொள்வனவு | | (1,650,695,183) | (864,985,546) |
| நிலையான வைப்புக்களின் முதலீடுகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | (751,826,467) | 1,253,981,953 |
| உயிரியல் சொத்துக்களில் முதலீடு | | 182,718,841 | (10,178,776) |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான பெறுவனவு | | | |
| பெறப்பட்ட நிதி வருமானம் | 6 | 656,487,028 | 541,537,093 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | 1,563,315,780 | 829,354,724 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| பெறப்பட்ட கடன்கள் / நிதிக் குத்தகை | | - | - |
| கொடுத்து தீர்க்கப்பட்ட கடன்கள் | 18 | - | (8,106,458) |
| பெறப்பட்ட அரச மானியங்கள் | | - | - |
| நிதி குத்தகை கடப்பாடுகளின் கீழான பிரதான கொடுப்பனவுகள் | 18 | (121,267,215) | (103,220,945) |
| செலுத்தப்பட்ட வட்டி | 6 | (69,120,741) | (87,338,394) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | | (1,597,489,212) | - |
| நிதி செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள் | | (1,787,877,168) | (198,665,797) |
| **பணம் மற்றும் பணத்திற்கு சமனானவையிலான தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | | (3,166,212,429) | 3,182,241,046 |
| **வருட ஆரம்பத்திலான பணம் மற்றும் பணத்திற்கு சமனானவை** | 21 | 3,972,130,454 | 789,889,406 |
| **வருட இறுதியிலான பணம் மற்றும் பணத்திற்கு சமனானவை** | 21 | 805,918,022 | 3,972,130,454 |

42 ஆம் பக்கம் முதல் 62 பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்க-ளின் உள்ளார்ந்த பகுதியாகும்.

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
# 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

## 1. கூட்டமைப்புத் தகவல்

### 1.1 பொதுவானவை

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதோர் நிறுவனமாகும். அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட பின்னர் கம்பனியானது தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக நிறுவப்பட்டது. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனயின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல 27, மெல்போன் அவெனியூ, கொழும்பு – 04 எனும் முகவரியில் அமைந்துள்ளதுடன் அதன் பிரதான வியாபார இடம் எம்பிலிப்பிட்டியவிலும் புத்தளவிலும் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்றாக கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர், பெல்வத்தை சீனிக் கைத்தொழில் நிறுவனத்தினதும் செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனத்தினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி கைமாற்றப்பட்டன.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

நிதிக் காலப்பகுதியின் போது, கரும்பு வேளாண்மை, சீனியையும் எதனோலையும் உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

### 1.3 விநியோகத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

பணிப்பாளர் சபையால் 2024 நவம்பர் 19 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் விநியோகத்திற்கென அதிகாரமளிக்கப்பட்டன.

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**
**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

2. **பொதுக் கொள்கைகள்**

**2.1 தயாரிப்பு அடிப்படை**

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக்கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானம், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சற் கூற்றுக்களையும் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

வேறொரு முறையில் குறிப்பிடப்பட்டாலன்றி கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன.

**2.1.1 இணங்கி ஒழுகுதல் கூற்று**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் சமர்ப்பணமும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியுள்ளன.

**2.1.2 தொடர்ந்து இயங்கும் நிலை**

நடக்கப் போவதை முன்னறியக்கூடிய எதிர்காலத்தில் இயங்கும் ஸ்தாபனமாகத் தொடர்ந்தும் இருப்பதற்கான கம்பனியின் இயலுமை குறித்த மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் அவர்களுக்கு கலைப்பதற்கோ அல்லது வர்த்தகத்தை நிறுத்துவதற்கான நோக்கம் எதுவுமில்லை.

**2.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் குறித்த சுருக்கம்**

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கம்பனியால் பின்வரும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டன.

**2.2.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்**

வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் கம்பனியால் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை ரூபாவில் (LKR) மேற்கொள்ளப்பட்டு வருவதனாலும், நிறுவனத்துடன் தொடர்புடைய அடிப்படையான நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளின் பொருளாதார சாரம்சத்தை இவ்வாறான நிலை திறம்பட பிரதிபலிக்கும் என்பதனாலும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன.

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலைத்து நிர்ணயிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய விகிதத்தில் மாற்றப்பட்டு வருகின்றன. அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயங்கள் வகைப்படுத்தப்படும் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் வகைப்படுத்தப்படும் நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், அத் திகதியில் நிலைத்து நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்று வீதத்தைக் கொண்டு இலங்கை ரூபாவில் மாற்றப்பட்டு வருகின்றன. நாணய மாற்றலில் எழுகின்ற அந்நிய செலாவணி வேறுபாடுகள், இலாப நட்டக்கூற்றில் கருத்திற்கொள்ளப்பமுகின்றது.

நாணய மாற்றலில் எழுகின்ற அந்நிய செலாவணி மாற்றத்திலான வேறுபாடுகள், இலாப நட்டக் கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் நாணயமற்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நாணய விகிதத்திலேயே மாற்றப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப் பெறுமதி அளவிடப்படும் நாணயமற்ற விடயங்கள், நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணயப் பரிமாற்ற விகிதங்களைக் கொண்டே மாற்றப்பட்டுவருகின்றன. நுாணயமற்ற விடயங்களை மீள மாற்றுவதால் உருவாகும் இலாபம் அல்லது நட்டமானது விடயத்தின் நியாயப் பெறுமதியிலான மாற்றத்தின் இலாபம் அல்லது நட்டம் குறித்த அங்கீகாரமாகவே கருதப்பட்டு வருகின்றது. (அதாவது, ஏனைய விரிவான வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்படும் நியாயப் பெறுமதியிலான இலாபம் அல்லது நட்டத்தை ஏற்படுத்தும் பொருட்கள் மீதான மாற்று வேறுபாடுகளும் முறையே விரிவான வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டம் ஆகியவற்றிலும் அடையாளங் காணப்பட்டு வருகின்றன.)

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
# 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

**2.2.2 வருமான அங்கீகாரம்**

குறித்த வருமானம் கம்பனிக்கு பொருளாதார நன்மைகள் கிட்டுமெனவும் நம்பக்கூடிய அளவில் அளவிடப்பட்டு எப்போது கொடுப்பனவு செய்யப்படுகின்றதென்பதைக் கருத்திற் கொள்ளாது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு விதிமுறைகளையும், வரிகள் அல்லது தீர்வைகள் நீங்கலாக கருத்திற்கொண்டே பெறப்பட்ட அல்லது பெறக்கூடிய நலனின் நியாயப் பெறுமதியிலேயே அளவிடப்படுகின்றது. கம்பனி, முதல்வர் அல்லது முகவராக செயற்படுகின்றதா என்பதை நிர்ணயிப்பதற்கான குறிப்பிடக்கூடிய பிரமாணங்கள் மீதான தனது வருமான ஒழுங்குகளை மதிப்பிட்டு வருகின்றது. தனது வருமான ஒழுங்குகள் அனைத்திலும் தான் முதல்வராகவே செயற்படுவதாக கம்பனி முடிவிற்கு வந்துள்ளது. கீழே விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அங்கீகாரப் பிரமாணங்களும் வருமானம் அங்கீகரிக்கபடுவதற்கு முன்னர் உகந்தவாறு பின்பற்றப்பட வேண்டும்.

**பொருட்களின் விற்பனை**

முக்கியமான இடர்களும் பொருட்களின் உரிமத்தின் குறித்த வெகுமானங்களும் பொருட் கொள்வனவாளரிற்கு மாற்றப்படும் நிலையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மீது உரிமத்திலோ அல்லது பயனுறுதியான கட்டுப்பாடு இல்லாத நிலையில் பொருட்கள் விற்பனையில் இருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**வட்டி வருமானம்**

காலக்கழிவின் அடிப்படையில் அளவிடப்படும் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட்ட செலவில் அளவிடப்படும் அனைத்து நிதிசார் பத்திரங்கள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்குமென வகைப்படுத்தப்படும் வட்டி தரும் நிதிசார் பொறுப்பின் நிகர தேறிய பெறுமதிக்கு, நிதிசார் பத்திரத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலப் பகுதியொன்றின் மூலம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவை அல்லது வருவாய்களைச் சரியான முறையில் தள்ளுபடி செய்யும் பயனுறுதிமிக்க வட்டி விகிதத்தைப் (இ.ஐ.ஆர்) பாவித்து வட்டி வருமானம் அல்லது செலவினம் பதிவுசெய்யப்படுகின்றது. வட்டி வருமானமானது, இலாப நட்டக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

**சொத்துக்களைப் பராதீனம் செய்யும் வகையில் ஏற்படும் வருவாய்களும் நட்டங்களும்**

சொத்துக்கள் பராதீனம் செய்யும் வகையில் ஏற்படும் இலாப, நட்டங்களை சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகைகளுடன் தேறிய விற்பனை முன்னெடுப்புக்களை ஒப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுவதுடன், இலாப நட்டக் கூற்றில் “ஏனைய தொழிற்படும் வருமான” த்திற்குள் வரும் தேறியவையாக அடையாளம் காணப்படுகின்றன. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் விற்கப்படுகையில், மீள்மதிப்பீட்டு மிகை ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் பிடித்துவைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்படுகின்றன.

**2.2.3 வரி**

**நடைமுறை வரிகள்**

வருமான வரிச் செலவானது, நடைமுறை வருமான வரியை உள்ளடக்குகின்றது. உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புடைய வருமான வரிச் செலவு தவிர்ந்தவை இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நடைமுறை வரியானது, அறிக்கையிடப்படும் திகதியில் சட்டமாக்கப்பட்ட வரி விகிதங்களைக் கொண்டு, காலப்பகுதிக்கான வரியிடத்தக்க வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் வரியும் முன்னைய வருடங்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் சீராக்கப்பட்ட வரியுமாகும்.

**விற்பனை வரி**

வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள் விற்பனை வரியின் தேறிய தொகையினை அங்கீகரிக்கின்றன, தவிர:

- சொத்துக்கள் அல்லது சேவைகளை வாங்கும்போது விற்பனை வரி ஏற்படும் போது விற்பனை வரியானது, குறித்த சொத்தின் பாகமாக அல்லது விலையுயர்ந்த பொருளின் பாகமாக பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்படுகின்றமை.
- விற்பனை வரியின் அளவுடன் குறிப்பிடப்பட்ட பெறத்தக்கவைகள் மற்றும் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்படும்.

வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறவிடக்கூடிய அல்லது அவர்களுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியின் நிகர தொகை நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய அல்லது செலுத்த வேண்டியவைகளின் பாகமாக உள்ளடக்கப்படுகின்றது.

**பிற்போடப்பட்ட வரி**

பிற்போடப்பட்ட வரி, நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த கொண்டு செல்லும் தொகைக்கும், வரிவிதிப்பு நோக்கிற்கான தொகைகளுக்குமிடையேயான தற்காலிக வேறுபாட்டு வரி பயனுக்காக வழங்கும் ஐந்தொகைப் பொறுப்பு முறையைப் பயன்படுத்தியே வழங்கப்படுகின்றது.

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
## 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

**2.2.4. செலவுகள்**

வியாபாரத்தை நடாத்துவதால் ஏற்படும் செலவுகள் அக்காலப்பகுதிக்கான இலாபத்தை நிர்ணயிப்பதற்காக வருமானத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.
திருத்தங்கள், மற்றும் புதுப்பித்தல்கள் என்பன செலவுகள் ஏற்பட்ட காலப்பகுதியின் இலாப நட்டத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.

**2.2.4.1. இரவல் கிரயம்**

இரவல் கிரயம் அது ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு தகுதி உள்ள சொத்தின் உற்பத்தி அல்லது சுவீகரிப்பு கட்டட அமைப்பு என்பனவற்றின் நேரிடையான வரையறை என்பனவற்றைத் தவிர ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. அச் சூழ்நிலையில் அவை சொத்தின் செலவில் ஒரு பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது.

**2.2.4.2. நிதிச் செலவு**

நிதிச் செலவுகளில் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கடன்களின் வட்டி செலவுகள் உள்ளடங்கியுள்ளன. தகுதியுள்ள ஒரு சொத்தின் உற்பத்தி அல்லது சுவீகரிப்பு, கட்டமைப்புடன் நேரடித் தொடர்பற்ற இரவல் கிரயங்கள் உரிய வட்டி முறைகளை பாவித்து இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.
வெளிநாட்டு நாணயங்களின் இலாப நட்டங்கள் தேறிய அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

**2.2.5. சொத்து, இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

**உரித்துடைய சொத்துக்கள்**

சொத்து, இயந்திரத் தொகுதி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இருந்து திரண்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் திரண்ட பழுதடைதல் இழப்புக்களின் செலவுகள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன.
சொத்து, இயந்திரத் தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் கிரயம், குறித்த சொத்தின் ஈட்டலுக்கு நேரடியாகக் காரணமாகும் செலவினத்தை உள்ளடக்குகின்றது. சுய நிர்மாணிப்புச் சொத்துக்களின் கிரயம், அதன் நோக்கம் கருதிய பாவனைக்கேற்ற விதத்தில் சொத்தை இயங்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடிக் காரணமான பொருட்கள், நேரடி உழைப்பு, வேறு ஏதேனும் செலவு ஆகியவற்றை உள்ளடக்கும். சம்பந்தப்பட்ட உபகரணத்தின் இயங்கு நிலைக்கு இன்றியமையாது கொள்வனவு செய்யப்படும் மென்பொருளானது அந்த உபகரணத்தின் பாகமொன்றாகவே மூலதனமாக்கப்படுகின்றது.
சொத்து, இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகங்கள் வெவ்வேறு பயன்தரு ஆயுட் காலங்களைக் கொண்டிருக்குமிடத்து அவை சொத்து, இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றில் வேறான பொருட்களாகவே (பாரிய கூறுகள்) கணக்கிடப்படுகின்றன.

**குத்தகைக்கிடப்பட்ட சொத்துக்கள்**

ஆரம்ப திகதியில் ஏற்பாட்டின் பெறுமதியின் அடிப்படையில் ஒரு குத்தகை அமைந்துள்ளதா மற்றும் ஏற்பாட்டை பூர்த்தி செய்வது விசேட சொத்து அல்லது சொத்துக்கள் பாவனை அல்லது ஏற்பாடுகளில் தெளிவாக உரிமையைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்காவிட்டாலும் சொத்தை பாவிக்க ஏற்பாடுகள் உரிமைமாற்றம் அளிக்கின்றதா என்பதில் தங்கி உள்ளதா என்பதன் நிர்ணயிப்பு.
கம்பனிக்கு மாற்றப்படும் நிதிக் குத்தகைகள், குத்தகைக்கிடப்படும் பொருட்களின் குத்தகைக்கிடப்படும் ஆதனத்தினதும் நியாயப் பெறுமதியில் அல்லது குறைவாக இருப்பின் ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் குத்தகை ஆரம்பிக்கப்பட்டு மூலதனமாக்கப்படுகின்றது. குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் கட்டணங்களுக்கிடையே உள்ளடக்கப்படுவதுடன் குத்தகைப் பொறுப்பின் கழிப்பனவு, மீதியாக உள்ள பொறுப்பின் தொடர் வட்டி வீதத்தை அடையக் கூடிய வகையில் இருத்தல் வேண்டும். நிதிக் கட்டணங்கள் நிதிக் கிரயத்தில் இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஓர் குத்தகைச் சொத்து, சொத்தின் பயன்தரு ஆயுட் காலத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்விடப்படுகின்றது. எவ்வாறெனினும், குத்தகைக் காலப்பகுதியின் முடிவில் உரிமை கம்பனிக்குக் கிடைக்கும் என்பதில் நியாயமான உறுதிப்பாடு இல்லாவிடில், குத்தகைக் காலம் மற்றும் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலத்தில் குறைவானதில் பெறுமானத்தேய்விடப்படுகின்றது.

தொழிற்படு குத்தகைக் கொடுப்பனவுகள் குத்தகைக் காலப்பகுதியில் நேர்கோட்டுப் பெறுமதி அடிப்படையில் இலாப நட்டக் கூற்றில் தொழிற்படு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**அடுத்து வரும் செலவினம்**

சொத்து, இயந்திரத் தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் ஏதேனும் ஒன்றைப் பதிலீடு செய்வதனால் ஏற்படும் செலவானது, குறித்த பாகத்தின் எதிர்கால பொருளாதார நன்மைகள் கம்பனிக்கும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுமிடத்து, அதன் கொண்டு செல்லும் தொகையாக ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் அதன் கிரயம் நம்பிக்கையுடன் அளவிடப்பட முடியும். பதிலீடு செய்யப்படும் கொண்டு செல்லப்படும் தொகையானது, கீழே தரப்பட்டுள்ள ஏற்பிசைவு வழங்க முடியாத கொள்கையின் பிரகாரம் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை.
சொத்து, இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் அன்றாட விற்பனைக்குப் நாளாந்த சேவைக் கிரயங்கள் இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**
**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

**ஏற்பிசைவு செய்யப்படாமை**

சொத்து, இயந்திரத் தொகுதி, மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் தொகைகள், பாவனையிலிருந்து அகற்றப்படும்போது, அதன் பாவனையிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் கிட்டாதென எதிர்பார்க்கப்படும்போது ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. ஏற்பிசைவு செய்யப்படாமையாலான இலாப நட்டங்கள், இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் இலாபங்கள் வருமானமாக வகைப்படுத்தப்படுவதில்லை.

**பெறுமானத்தேய்வு**

சொத்தொன்றில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகளை அனுபவிக்கக் கூடியதாக உள்ள காலத்தினை துல்லியமாக வெளிப்படுத்தும் வகையில் சொத்து, இயந்திரத் தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயன் தரு ஆயுட்கால அடிப்படையில் நேர்கோட்டு அடிப்படையில் இலாப நட்டக் கூற்றில் பெறுமானத்தேய்வு ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நிதிக் குத்தகைகளின் கீழ் வைத்திருக்கப்படும் சொத்துக்கள், கம்பனி குத்தகைக் கால முடிவில் உரிமத்தைக் கொண்டிருக்குமென நியாயபூர்வமான முறையில் நிச்சயப்படுத்தப்பட்டால் அன்றி, சமஅளவில் சொந்தமான சொத்துக்களின் குத்தகை தவணை மற்றும் பயன்தரு ஆயட்காலத்தில் குறைவானதில் பெறுமானத்தேய்விடப்படுகின்றன. இறையிலாதனக் காணி பெறுமானத்தேய்விற்குள்ளாவதில்லை.

சொத்தொன்றின் தேய்மானமானது, அது பாவனைக்கு கிடைக்கும் போது, விற்பனைக்குரியதென பகுக்கப்படும் போது அல்லது ஏற்பிசைவு செய்யப்படாத போது இதில் எது முதலில் இடம்பெறுகிறதோ அந் நாளிலிருந்து ஆரம்பமாகின்றது.

சொத்துக்களின் கழித்துவரும் மீதியான பெறுமதிகள், பயன்தரு ஆயுட் காலங்கள் மற்றும் தேய்மான முறைகள் ஒவ்வொரு நிதியாண்டிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமாயின், எதிர்பார்க்கக் கூடிய வகையில் சீராக்கப்பட்டும் வருகின்றன.

**2.2.6. இருப்புகள்**

இருப்புகள் பழமைவாய்ந்த மற்றும் அதிகம் விற்பனை செய்யப்படாத பொருட்கள், என்பவற்றை தள்ளுபடி செய்து கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதியில் பெறுமதியிடப்படுகின்றன. நிகர தேறத்தகு பெறுமதி என்பது பொருட்களை சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடியதில் இருந்து பூர்த்திசெய்யப்பட்டதின் மதிக்கப்பட்ட செலவு மற்றும் விற்பனை செய்ய தேவைப்படும் மதிப்பிடப்பட்ட கிரயம் கழித்த விலையாகும்.

பொருட்களை தற்போதைய இடத்திற்கு மற்றும் நிலமைக்கு கொண்டுவந்ததினால் ஏற்பட்ட செலவுகள் பின்வரும் விதிமுறைகளை பயன்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| இருப்பு உற்பத்தி செய்தல் | - | அறிக்கையிடற் திகதி வரையில் ஏற்பட்ட ஏனைய மேந்தலைகள் அடங்கலாக நேரடிக் கிரயத்தில் |
| இருக்கும் கரும்பு | - | அறிக்கையிடற் திகதி வரையில் ஆரம்ப கிரயம் மற்றும் அதனால் ஏற்பட்ட பகுதியளவான மேந்தலைகள் அடங்கலாக நேரடிக் கிரயத்தில் |
| ஏனைய இருப்புகள் | - | உள்ளபடியான கிரயத்தில் |
| வழியில் உள்ள பொருட்கள் | - | உள்ளபடியான கிரயத்தில் |

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
## 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

**2.2.7. நிதி ஆவணங்கள் - ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் தொடர் அளவீடு**
**நிதிசார் சொத்துக்கள்**
**ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இல் உள்ள நிதி சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், முதலீடு முதிர்ச்சி பெற வைக்கப்பட்டுள்ளவைகள் விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள் அல்லது பொருத்தமானதாக இழப்புகளை குறைப்பதில் இழப்பை குறைக்கும் ஆவணங்களாக உள்ளவைகள் அல்லது மாற்றத்தை கணக்கிடும் அளவை என்பதன் மூலம் நியாயப் பெறுமதியில் வைக்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பிசைவில் கம்பனி தனது நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல்களை நிர்ணயிக்கின்றது.
